உ

திருச்சிற்றம்பலம்

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# தாயுமானவரும் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளும்



தாயுமானவர்



பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்


ஆசிரியர்:

சித்தாந்த சரபம், சைவ சித்தாந்த கலாநிதி

முனைவர் **கோமதி சூரியமூர்த்தி** எம்.ஏ., பி.எச்.டி.

உ

திருச்சிற்றம்பலம்

ஓம் குமரகுரு தாச குருப்யோ நம

# தாயுமானவரும் பாம்பன் ஸ்ரீமத் குமரதாச சுவாமிகளும்




ஆசிரியர்

சித்தாந்த சரபம், சிவஞான வாரிதி

**முனைவர் கோமதி சூரியமூர்த்தி,** எம்.ஏ., பிஎச்.டி.

மேனாள் பேராசிரியர், சைவசித்தாந்தத்துறை

மதுரை காமராஜ் பல்கலைக்கழகம்



மஹாதேஜோ மண்டல சபை (15/88) அனுமதியுடன்

நூல் வெளியிடுவோர்

**கீதா இராஜமகேந்திரன்,** B.Com., M.B.A

Indian Oil Star Gas Distributor, Chennai

**கல்பனா மஹாதேவன்,** B.E.

**மஹாதேவன் சதாநந்தன்,** B.E., M.S. (USA)

**விஷ்ணுபிரியா கார்த்திகேயன்,** M.C.A.

**கார்த்திகேயன் சதாநந்தன்,** B.E., Q.L.A. S.Q.S.(UK)

Information Technology Specialists, U.S.A

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூற் பெயர் | : | **தாயுமானவரும், பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளும்** |
| ஆசிரியர் | : | சித்தாந்த சரபம் **முனைவர் கோமதி சூரிய மூர்த்தி** |
| மொழி | : | தமிழ் |
| தாள் | : | 70 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ |
| நூல் அளவு | : | **5.5" x 8.25" inches** |
| மொத்த பக்கங்கள் | : | 60 |
| முதல் பதிப்பு | ; | டிசம்பர், 2017 |
| வெளியிட்டோர் | : | நடராசன் – கனகாம்புஜம் அறக்கட்டளை |
| அச்சிட்டோர் | : | **திரு. எஸ். அரங்கநாதன்**<br>எஸ்.எஸ். கிராபிக்ஸ்<br>54/2, முகம்மது உசேன் தெரு,<br>இராயப்பேட்டை, சென்னை–14.<br>தொலைபேசி : **044-28485236**<br>அலைபேசி : **98840 54572** |
| நூல் கிடைக்கும் இடம் | : | **1. திரு. செ.வே. சதாநந்தன்**<br>"திருவேரகம்", 117, 86வது தெரு,<br>அசோக் நகர், சென்னை – 600 083.<br>தொலைபேசி : **044-4320 4136**<br>அலைபேசி : **94440 04136**<br><br>**2. முனைவர் கோமதி சூரிய மூர்த்தி**<br>391, ஆழ்வார் நகர், நாகமலை,<br>மதுரை – 625 019.<br>தொலைபேசி : **0452-2458318**<br>அலைபேசி : **9791376681** |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பதிப்புரை | iv |
| 2. | முன்னுரை | x |
| 3. | தாயுமானவர் வரலாற்றுச் சுருக்கம் | 1 |
| 4. | தாயுமானவர் அருளிய பாடல்கள் | 4 |
| 5. | தாயுமானவர் பாடல்களுக்கும் பாம்பன் சுவாமிகள் பாடல்களுக்கும் உள்ள ஒப்புமைகள் | 5 |
| 6. | சைவசமயாசாரிகள் நால்வரைப் போற்றுதல் | 7 |
| 7. | உயிர்களின் பிறவி | 15 |
| 8. | ஆணவ மலம் – இருள் மலம் | 18 |
| 9. | வினை நீக்கம் | 22 |
| 10. | நால்வகை நெறிகள் | 25 |
| 11. | அறக்கருத்துக்களில் ஒப்புமைகள் | 31 |
| 12. | மனத்திற்கு கூறும் உவமைகள் | 39 |
| 13. | இறை இன்பம் பெற அருளை வேண்டல் | 43 |

உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# பதிப்புரை

பாம்பனார் – வாரியார் அடிப்பொடி
சித்தாந்த ரத்தினம், **செ.வே. சதாநந்தன்**

"அன்று நால்வருக்கும் ஒளிநெறி காட்டும்
அன்புடை ஜோதியே செம்பொன்
மன்றுள் முக்கண்ணும் காள கண்டமுமாய்
வயங்கிய வானமே என்னுள்
துன்று கூர் இருளைத் துரந்திடும் மதியே
துன்பமும் இன்பமும் ஆகி
நின்ற வாதனையைக் கடந்தவர் நினைவே
நேசமே நின் பரம் யானே."

– தாயுமானவர்

"வருவாய் அறியா எளியேன் மருள்தீர் அடிகேள் சரணம்
திருவார் புகழ் சொன்ன பிரான் செல்வச் சிவமே சரணம்
பெருவான் எனவே நாளும் பின்றா அருளால் எனையாள்
ஒருவானவனே உன்சீர் உறுநர்க்கு உலகம் பரமே."

– பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

2017 நவம்பர் மாதம் அடியேன் டாக்டர் சூரியமூர்த்தி அவர்களிடம் தொலைபேசியில் அம்மா அவர்கள் ஒரு நூல் எழுதித் தந்தால் டிசம்பரில் நடைபெற உள்ள "**மயூர வாகன சேவனம்**" விழாவின் போது வெளியிட விரும்புகிறேன் என்றேன். மறுநாள் அவர்கள் என்னைத் தொடர்பு கொண்டு அம்மா அவர்கள் "**தாயுமானவரும் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளும்**" என்ற தலைப்பில் நூல் எழுத நினைக்கிறார்கள். நூல் எழுத அம்மா இசைந்ததற்கு மிகவும் நன்றி. அம்மா அவர்கள் தொடர்ந்து எழுதி

நூலை நிறைவு செய்து அனுப்ப பாம்பன் சுவாமிகளின் திருவருளையும், முருகப்பெருமானின் திருவருளையும் வணங்கிப் பிரார்த்திக்கிறேன் என்று சொன்னேன்.

காலந்தோறும் தமிழகத்தில் அருளாளர்கள் பலர் தோன்றி, தங்களின் நூல்களின் மூலம், மக்களிடையே சைவ சமய உணர்வைத் தூண்டி, அறவுரைகளையும், ஒழுக்க நெறிகளையும் எடுத்துரைத்து மக்களை நல்வழிப்படுத்தியுள்ளனர். கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தாயுமானவர் தமிழ் மக்களின் உள்ளத்தை மிகவும் கவர்ந்தவர் ஆவார். அவர்க்குப் பின் தோன்றியவர்கள் தம் நூல்களில் தாயுமானவரைப் போற்றி அவரின் பாடல்களை மேற்கோள்களாக காட்டியுள்ளனர். கி.பி. இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாம்பன் சுவாமிகளும் தம் நூலில்.

"**அருளும் வளம் பொருந்திய தாயுமானவரின்**
**அருளைப் பெறுவது எந்நாளோ**" என்று

தாயுமானவரைப் போற்றியுள்ளார். மேலும், "தாயுமானவர் போன்ற அருளாளர்கள் பலர் வேதாந்த சித்தாந்த சமரசத் தன்மையான அமுத நெறியாகச் சொன்ன உயர்ந்த வாக்குகள் என் சம்மதத்திலுள்ள முடிவுக்கு ஏற்ற முடிவேயாகும்" என்று பாம்பன் சுவாமிகள் போற்றுகின்றார்.

தாயுமானவர் அருளிச் செய்த பாடல்கள் 1451 ஆகும். அவை பரசிவ வணக்கம் முதல் ஆனந்த களிப்பு வரை 56 தலைப்புக்களில் அமைந்துள்ளன. பாம்பன் சுவாமிகள் முருகப்பெருமானின் அருளால் அருளியுள்ள பாடல்கள் 6666 ஆகும். அவற்றைச் சுவாமிகளே ஆறு மண்டலங்களாகத் தொகுத்துள்ளார். சுவாமிகள் தாம் அருளியுள்ள பரிபூரணானந்த போதம் என்ற நூலுக்குச் சிவப் பிரகாச உரையும், தகராலய ரகசியம் என்ற நூலுக்குச் சதானந்த சாகரம் என்ற உரையும், திருப்பா என்ற நூலுக்கு முதல் நான்கு பதிகங்கட்குத் திட்பம் என்ற தலைப்பிலும் உரை எழுதியுள்ளார்.

சுவாமிகள் தம் நூல்களிலும், உரைகளிலும் தாயுமானவரின் பாடல்களை மேற்கோள்களாகக் காட்டியுள்ளார். டாக்டர் கோமதி சூரியமூர்த்தி அம்மையார் அவர்கள் தாம் எழுதியுள்ள இந்நூலில் அவற்றை எடுத்துக் காட்டி உள்ளார்கள்.

தாயுமானவரும், பாம்பன் சுவாமிகளும் சைவ சமயமே மேலான சமயம் என்ற கொள்கை உடையவர்கள் தான், தாயுமானவர்,

“**சைவ சமயமே சமயம்**
**சமயாதீதப் பழம்பொருளைக்**
**கை வந்திடவே மன்றுள் வெளி**
**காட்டும் இந்தக் கருத்தை விட்டுப்**
**பொய் வந்து உழலும் சமயநெறி**
**புகுதல் வேண்டாம் முக்தி தரும்**
**தெய்வ சபையைக் காண்பதற்குச்**
**சேவாரும் சகத்தீரே**”.

என்ற பாடல் இதற்குச் சான்றாகும். பாம்பன் சுவாமிகள் தாம் எழுதியுள்ள “**சமயங்களைக் குறித்த வியாசம்**” என்ற கட்டுரையில் எல்லாச் சமயங்களிலும் மேலானது சைவ சமயம் என்பதற்குத் தாயுமானவரின் முற்கூறிய பாடலை மேற்கோளாகக் காட்டியுள்ளதை அம்மா அவர்கள் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

தாயுமானவரின் பாடல்கள் “**சித்தாந்த தமிழ்மறை**” என்று போற்றப்படுகிறது. பாம்பன் சுவாமிகள் “**சைவ சித்தாந்த ஞான பானு**” எனப் போற்றப்பட்டுள்ளார்.

இருவரும் தம் கால மக்கள் சமயம் பூசல்கள் இன்றி ஒருமையுணர்வுடன் சமயப் பொதுமையுடன் வாழ வேண்டும் என விரும்பி, வேதாந்த சித்தாந்த சமரச நிலையை உணர்த்தியுள்ளனர். இருவர் பாடல்களும் பக்திச்சுவை மிக்கவை. உவமை நயம் மிகுந்து படிப்பவர்கட்கு இன்பம் தருபவை.

அம்மா அவர்கள் மதுரை - காமராஜ் பல்கலைக் கழகப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற போதிலும், தம் ஓய்வுக் காலத்தைத் திருமுறைகள், சாத்திர நூல்கள், சைவ சமய இலக்கிய நூல்கள் பலவற்றை ஆராய்ந்து நூல்கள் பலவும், ஆய்வுக் கட்டுரைகள் பலவும் எழுதி வருகிறார்கள். ஆன்மீக தொடர்பாக எழுதியுள்ள நூல்கள் 25க்கும் மேலாகும். கட்டுரைகள் 225க்கும் மேலாகும்.

அம்மா அவர்கள் அடியேனின் வேண்டுகோளை ஏற்று பாம்பன் சுவாமிகள் தொடர்பாக எழுதியுள்ள நூல்கள் 12 ஆகும். அவை **பாம்பன் சுவாமிகள் உணர்த்தும் மனித மேம்பாட்டுச் சிந்தனைகள், பாம்பன் சுவாமிகளின் பெருமை, பாம்பன் சுவாமிகள் பாடல்களில் சித்தாந்தக் கோட்பாடுகள், பாம்பன் சுவாமிகளின் பாடல்களில் சைவ சமயாச்சாரியார் நால்வர் வரலாற்றுக் குறிப்புகளும் சிந்தனைகளும், செக்கர்வேள் செம்மாப்பு முதல் காண்டம் வினா விடை, பரிபூரணானந்த போதம் வினா விடை, தகராலய ரகசியம் வினா விடை, குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி வினா விடை, பாம்பன் சுவாமிகள் போற்றும் முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகள், அருணகிரி நாதரும் பாம்பன் சுவாமிகளும், சுவாமிகள் போற்றும் ஐம்முகச் சிவனும் ஆறுமுகச் சிவனும், தாயுமானவரும் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளும்** ஆகும். இவற்றுள் "**பாம்பன் சுவாமிகளின் பெருமை**" என்ற நூல் தவிர ஏனையவை, எங்கள் குடும்பத்தினர் எங்கள் பெற்றோரின் நினைவாக நிறுவியுள்ள நடராசர் - கனகாம்புஜம் அறக்கட்டளை சார்பாக மஹாதேஜோ மண்டல சபையினரின் ஆதரவோடு வெளியிடப்பட்டவை.

"**பாம்பன் சுவாமிகளின் பெருமை**" என்ற நூலைச் சைவ சித்தாந்தப் பெருமன்றம் சார்பாக அடியேன் வெளியிட திருவருள் கூட்டியுள்ளது.

அம்மா அவர்கள் எழுதியுள்ள தாயுமானவரும், பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளும் என்ற இந்நூல் மூன்று இயல்கள்

கொண்டது. முதல் இயலில் தாயுமானவரின் வரலாற்றுச் சுருக்கம் ஆகும். வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் தம் புலவர் புராணம் என்ற நூலில் தாயுமானவரின் வரலாற்றுச் சுருக்கத்தை 27 செய்யுட்களில் கூறியுள்ளார்கள்.

இரண்டாம் இயலில் தாயுமானவர் அருளிய பாடல்களைப் பின்வந்த அருளாளர்கள் பலர் போற்றி, அவருடைய பாடல்களைத் தங்கள் நூல்களில் மேற்கோள்களாக எடுத்தாண்டுள்ளதைக் கூறி, பாம்பன் சுவாமிகள் தாயுமானவரைப் போற்றியுள்ளதையும், தம் நூல்களில் மேற்கோள்களாக எடுத்தாண்டுள்ளதையும் விளக்கியுள்ளார்கள். தாயுமானவரைப் பலரும் போற்றியுள்ளதையும் அம்மையார் குறிப்பிட்டுள்ளார்கள்.

மூன்றாம் இயலில் இருவரின் பனுவல் தலைப்புக்களின் ஒப்புமைகளையும், சைவ சித்தாந்தக் கருத்துக்களின் ஒப்புமைகளையும், அறக்கருத்துக்கள் ஒழுக்க நெறிகளையுள்ள ஒப்புமைகளையும் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியுள்ளார்கள். இந்நூலை வாசிப்பவர்கள் அம்மா அவர்கள் இருவரின் பாடல்களை நுட்பமாக ஆராய்ந்துள்ளமைப் புலனாகும். சைவ சித்தாந்த உண்மைகளை வெளிப்படுத்தும் போது உயிர்களின் தோற்றம் நான்கு என சைவ சித்தாந்த நூல்கள் கூற, சுவாமிகள் நால்வகைத் தோற்றத்துடன் மானதம் என்று ஒன்றைச் சேர்த்து ஐந்து என்று கூறியதற்கான காரணத்தை, புராண நூலில் காணப்படும் மானசீக புத்திரர்களை உருவாக்கும் கலையைப் பற்றிக் கூறியுள்ளது அடியேனுக்குப் புதிய செய்தியாகும்.

அம்மா அவர்கள் எங்கள் வேண்டுகோளை ஏற்று மிகக் குறுகிய காலத்தில் இந்நூலை எழுதித் தந்தமைக்கு எங்கள் குடும்ப சார்பாகவும், மஹாதேஜோ மண்டல சார்பிலும் அடியேன் நன்றி கூறுகின்றேன். அம்மாவின் இறைப்பணி மேன்மையடைய உதவும் அம்மையாரின் கணவர் மதுரை காமராசர் பல்கலைக் கழக மேனாள் பேராசிரியர், திருவாசகச் சுடர், சித்தாந்த தொண்டர்

மாமணி **முனைவர் செ.ஈ. சூரியமூர்த்தி M.Sc., M.S., Ph.D., (U.S.A.)** அவர்கட்கும் எங்கள் நன்றி. அம்மையார் அவர்கட்கும், அவர்களின் கணவர் மற்றும் குடும்பத்தார் அனைவருக்கும் பாம்பன் சுவாமிகளின் குருவருளும், மயூரப் பெருமான் திருவருளும் சகல, செல்வ யோக மிக்க பெருவாழ்வு தொடர்ந்து அருளப் பிரார்த்திக்கிறோம்.

எங்கள் வேண்டுகோளை ஏற்று இந்நூலை அழகாக அச்சிட்டு உதவிய எஸ்.எஸ். கிராபிக்ஸ் நிறுவன உரிமையாளர் **திரு. எஸ். அரங்கநாதன்** அவர்கட்கும் நன்றி.

எங்கள் பெற்றோர் நினைவாக ஏற்படுத்திய அறக்கட்டளை மூலம் நூல்கள் வெளியிட அருள்செய்த பாம்பன் சுவாமிகளின் குருவருளையும், மஹாதேஜோ மண்டல சபையின் அனுமதியையும் நன்றியுணர்வுடன் போற்றுகின்றோம்.

இங்ஙனம்,

நடராசன் – கனகாம்புஜம் அறக்கட்டளை சார்பாக
பாம்பனார் – வாரியார் அடிப்பொடி
சித்தாந்த ரத்தினம் **செ.வே. சதாநந்தன்**
தலைவர், மஹாதேஜோ மண்டல சபை (தோற்றம் 1926)
Chief Refinery Co-ordinator (Retd.), Indian Oil

அறக்கட்டளையின் மற்ற உறுப்பினர்கள்

**பொ.ந. நமசிவாயம்**
GM (Retd.) Madras Fertilizer,
Vice President, Saiva Siddhanta Perumandram (தோற்றம் 1905)

**வி.ச. சிவக்குமார்**
Manager (Retd) Southern Industries

**கீதா இராசமஹேந்திரன்**
Star Gas Distributor,
Indian Oil

**ந.லோ. செந்தில்நாதன்**
Vice President,
Standard Chartered Bank

❊ ❊ ❊ ❊ ❊

உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# முன்னுரை

சித்தாந்த கலாநிதி, சித்தாந்த செம்மணி, சித்தாந்த சரபம்,
சிவஞானவாரிதி **முனைவர் கோமதி சூரியமூர்த்தி**

**"நித்தியமாய் நிர்மலமாய் நிஷ்களமாய்**
**நிராமயமாய் நிறைவாய் நீங்காச்**
**சுத்தமுமாய் தூரமுமாய்ச் சமீபமுமாய்த்**
**துரிய நிறை சுடராய் எல்லாம்**
**வைத்து இருந்த தாரகமாய் ஆனந்த**
**மயம் ஆகி மனம் வாக்கு எட்டாச்**
**சித்து உருவாய் நின்றச் சுகாரம்பப்**
**பெருவெளியைச் சிந்தை செய்வோம்."**

(தாயுமானவர், 3, பொருள் வணக்கம், செ.1)

**"அறிவினுக்கு அறிவான பொருளை அடிகட்கு அருளும்**
**ஆனந்த போத நிதியை**
**அத்துவித நிச்சய அகண்ட ஏக ஆகாரம்**
**ஆன சின்மய வாரியைக்**
**குறிதிரிபு இலாத சிவயோக பரிபூரணக்**
**கூர்ப்பினைக் குருபரத்தைக்**
**குழவு முது கிழமையின் திலக கோசர சிற்சு**
**கோதய விலாச வெளியைத்**
**துறவர் இருதய நடையை அப்பரம தேசு எனச்**
**சுடரும் ஆனந்த வடிவைச்**
**சுத்த பரதத்துவச் சுடரைச் சுயம்புவைத்**
**துரிய ஓங்கார முதலை**
**நிறை சரத நிட்கள் நிர்ஆக நிருநாமபர**
**நிட்டையில் நிலாவு திருவை**
**நித்திய சுவானுபவம் உற்ற அயில் அடிகளை,**
**நிரந்தரம் உள்நெஞ்சில் வைப்போம்."**

(பாம்பன் சுவாமிகள், 1. தெய்வ வணக்கம், செ.1)

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இணையற்ற சைவ மெய்ஞ்ஞானி பாம்பன் சுவாமிகள் என அழைக்கப் படும் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் ஆவார். அவர் முருகப் பெருமானிடம் உபதேசம் பெற்றவர். முருகப் பெருமானின் திருவுருவக் காட்சியைப் பலமுறை காணும் பேறு பெற்றவர். ஒரு சமயம் சுவாமிகள் சென்னை வந்த போது கி.பி. 1923 இல் டிசம்பர் 27 ஆம் தேதி பகல் தம்புச் செட்டிவீதியில் நடந்து சென்ற போது, ஒரு குதிரை வண்டியின் சக்கரம் சுவாமியின் இடைக்கணைக் காலில் ஏறிக் கால் எலும்பு முறிந்து விட்டது. அன்பர்கள் சிலர் சுவாமிகளை அரசுப்பொது மருத்துவமனையில் மன்றோ வார்டில் சேர்த்தனர். சுவாமிகள் படுக்கையில் இருந்தபடியே முருகப் பெருமானை உள்ளம் உருகப் பிரார்த்திக்க, மருத்துவமனையில் சேர்ந்த பதினோராவது நாளில் சிறியதும், பெரியதுமான இரண்டு மயில்கள் மேற்றிசையில் ஆகாயம் அளாவத் தோகை விரித்து ஆடிக்கொண்டு வந்து மறைந்தன. அவற்றைச் சுவாமிகள் கண்ணுற்றுக் கை கூப்பித் தொழுதார். மயில் காட்சி பற்றி ஆறாம் மண்டலம் ஸ்ரீமத் குமாரசுவாமியம் என்ற நூலில், 3. கடாவிடைக் காண்டம், 4. அசோகசால வாசம் ஐந்தாம் பத்தில் செ.7இல் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார். சுவாமிகள் 1926 இல் மஹாதேஜோ மண்டல சபையை அமைத்து, அதில் தான் கண்ட மயில் காட்சி வைபவத்தைச் சுவாமிகள் சிறப்பாகக் கொண்டாட எண்ணம் கொண்டார். அவ்விழாவிற்கு **மயூரவாகன சேவனம்** என்று பெயர். இந்த விழா எப்படி நிகழ்த்தப்படவேண்டும் என்பதை விளக்கிச் சுவாமிகள் பத்ததி ஒன்று எழுதினார். அது சுவாமிகள் தயாரித்த வில் சாஸனத்தில் இடம் பெற்றுள்ளது. அச்சபையினர் ஆண்டு தோறும் மார்கழி மாதம் சுக்லபட்ச பிரதமை தினத்திலும், மறுநாளிலும் அவ்விழாவைக் கொண்டாடி வருகின்றனர்.

2017 நவம்பர் மாதம் சென்னை, மஹாதேஜோ மண்டல சபைத் தலைவரும், பாம்பன் – வாரியார் அடிப்பொடி, சித்தாந்த ரத்தினம், திரு. செ.வே. சதாநந்தம் ஐயா அவர்கள், அடியேன் ஒரு நூல் எழுதித் தந்தால் டிசம்பர் 18இல் நடைபெற இருக்கும் விழாவில் வெளியிடலாம், என தொலைபேசி மூலம் தெரிவித்தார்கள். ஐயா அவர்களின் அருளாசியினால், குருவருளும், திருவருளும் துணை

நிற்க அடியேன் எழுதிய நூல் **தாயுமானவரும் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளும்** என்பதாகும்.

காலந்தோறும் தமிழகத்தில் வாழையடி வாழையாக அருளாளர்கள் பலர் தோன்றி, தங்கள் நூல்களின் மூலம் மக்களிடையே சைவ சமய உணர்வைத் தூண்டி, அறவுரைகளையும், ஒழுக்க நெறிகளையும் எடுத்துரைத்து மக்களை நல்வழிப் படுத்தியுள்ளனர். கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தாயுமானவர் தமிழ் மக்களின் உள்ளத்தை மிகவும் கவர்ந்தவர் ஆவார். தாயுமானவர் அருளிச்செய்துள்ள பாடல்கள் 1451, அவை பரசிவ வணக்கம் முதல் ஆனந்தக் களிப்பு வரை 56 தலைப்புக்களில் அமைந்துள்ளன.

பாம்பன் சுவாமிகள் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர், முருகப்பெருமானின் அருளால் அருளியுள்ள பாடல்கள் 6666 ஆகும். அவற்றைச் சுவாமிகளே ஆறு மண்டலங்களாகத் தொகுத்துள்ளார். அவற்றுள் மூன்றாம் மண்டலத்தில் தொகுக்கப்பட்டுள்ள **பரிபூரணானந்தம்** என்ற நூலுக்குச் சிவப்பிரகாச உரையும், சிவ சூரிய பிரகாச உரையும் **தகராலய ரகசியம்** என்ற நூலுக்குச் “சதானந்த சாகரம்” என்ற விசேட உரையும். சுவாமிகள் எழுதியுள்ளார்கள். ஐந்தாம் மண்டலத்தில் தொகுக்கப்பட்டுள்ள **திருப்பா,** என்ற நூலின் நான்கு பதிகங்கட்குச் சுவாமிகள் திட்டம் என்ற தலைப்பில் உரை எழுதியுள்ளார்.

தாயுமானவர் காலத்திற்குப் பின் தோன்றிய அருளாளர்கள் பலர் தங்கள் நூல்களில் தாயுமானவரைப் போற்றியுள்ளதோடு, அவருடைய பாடல்களையோ, பாடல் தொடர்களையோ மேற்கோள்களாகக் காட்டியுள்ளனர். பாம்பன் சுவாமிகளும் “**அருளும் வளம் பொருந்திய தாயுமானவரின் அருளைப் பெறுவது எந்நாளோ**“ என்று தாயுமானவரைப் போற்றியுள்ளார் ( 27. உள்ளூர்ச் சிவசுப்பிரமணிய சதகம், செ.64). “**தாயுமானவர் போன்ற அருளாளர்கள் பலர் தூய்மையுள்ள வேதாந்த சித்தாந்த சமரசத் தன்மையான, அமுத நெறியாகச் சொன்ன உயர்ந்த வாக்குகள் என் சம்மத்திலுள்ள முடிவுக்கு ஏற்ற முடிவேயாகும்**” என்று பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார். (1.8 திருவிராமேச்சுரம், செ.8)

தாயுமானவர். "**சைவசமயமே சமயம்**", என்று தொடங்கும் பாடலில் (30. காடும் கரையும், செ.2) சைவசமயமே உண்மையான சமயம் என்பதை உணர்த்துகின்றார். பாம்பன் சுவாமிகளும் **சைவசமயமே சிறந்த சமயம்** என்ற கொள்கையுடையவர். சுவாமிகள் "**சமயங்களைக் குறித்த வியாசம்**" என்ற கட்டுரையில் சைவ சமயமே மேலான சமயம் என்பதற்கு முற்கூறிய தாயுமானவரின் பாடலையே மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

தாயுமானவரும், பாம்பன் சுவாமிகளும் அருளியுள்ள பாடல்கள் சைவசமயத் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்திருந்த போதிலும், தம் கால மக்கள் சமயப்பூசல்கள் இன்றி ஒருமையுணர்வோடும், சமயப் பொதுமையுடன் வாழ வேண்டும் என்று நினைத்துப் பாடியதால் அவை வேதாந்த சித்தாந்த சமரச நிலையை வெளிப்டுத்துகின்றன. தாயுமானவர்,

> "**சைவ முதல் ஆம் அளவில் சமயமும் வகுத்து மேல்**
> **சமயம் கடந்த மோன சமரசம் வகுத்த நீ**"

(4.சின்மயானந்தகுரு, செ.4) என இறைவனைச் சமயம் கடந்த மோன சமரசம் வகுத்தவராகக் கூறுகின்றார்.

பாம்பன் சுவாமிகளும் தன் பரிபூரணானந்த போதம் என்ற நூலில் பதி பசு பாச யதார்த்த விளக்கப் படலத்தின் செ.30 இன் உரைவிளக்கத்தில் முற்கூறிய தாயுமானவரின் பாட்டினை மேற்கோளாகக் காட்டுகின்றார். (சிவ சூரியப் பிரகாச உரை ப.60 ) மேலும் சுவாமிகள் அந்நூலின் துறவற விளக்ககப் படலம் செ.27 இன் உரைவிளக்கத்தில் **வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை** என்று கூறும் தாயுமானவரின் வாக்கையே மேற்கோளாகக் காட்டியுள்ளார். (சிவ சூரிய பிரகாச உரை, ப. 201) மேலும் பாம்பன் சுவாமிகள் துறவற விளக்கம் படலம், செ. 37. இன் உரை விளக்கத்தில், "**சைவ முதலான அளவில் சமயமும் வகுத்த நீ**" என்று தாயுமானவர் கூறியுள்ளதை மேற்கோளாகக் காட்டுகின்றார் (சிவசூரியப் பிரகாச உரை, ப. 217).

தாயுமானவரின் பாடல்கள் "**சித்தாந்த தமிழ்மறை**" எனப் போற்றப்படுகின்றது. பாம்பன் சுவாமிகள் "சைவசித்தாந்த ஞான பானு" எனப் போற்றப்பட்டுள்ளார்.

இருவரின் பாடல்களும் பக்திச் சுவை மிக்கவை. உவமை நயம் மிகுந்து படிப்பவர்கட்கு இன்பம் தருபவை. இருவருமே தங்கட்கு முன் வாழந்த அருளாளர்களைப் போற்றியுள்ளனர்.

"**தாயுமானவரும் பாம்பன் ஸ்ரீமத் குமர குரு தாச சுவாமிகளும்**" என்ற இந்நூல் மூன்று இயல்களைக் கொண்டுள்ளது. முதல் இயலில் தாயுமானவரின் வரலாறு கூறப்பட்டுள்ளது. இரண்டாம் இயல் தாயுமானவர் அருளிய பாடல்களின் பொது அறிமுகம் ஆகும். மூன்றாவது இயல் தாயுமானவர் பாம்பன் சுவாமிகள் இருவரும் அருளிய பனுவல் தலைப்புக்களின் ஒப்புமையையும், சித்தாந்தக் கருத்துக்களின் ஒப்புமையையும். அறக்கருத்துக்கள், ஒழுக்க நெறிகளிலுள்ள ஒப்புமையையும் எடுத்துக் காட்டுடன் விளக்குகிறது.

சில ஆண்டுகட்கு முன்பு வரை பாம்பன் சுவாமிகள் பற்றி அதிகம் அறிந்திராத அடியேனுக்குச் சுவாமிகள் அருளிய நூல்கள் பலவற்றை அன்பளிப்பாகத் தந்து, படித்து, நூல் எழுதித் தரும்படி ஆற்றுப்படுத்தியவர் சென்னை, மஹாதேஜோ மண்டல சபைத் தலைவரான பாம்பன்-வாரியார் அடிப்பொடி, சித்தாந்த ரத்தினம் செ.வே. சதானந்தம் ஐயா ஆவர். அவர்களுடைய அருளாசியினால் பாம்பன் சுவாமிகள் தொடர்பாக அடியேன் எழுதியுள்ள நூல்கள் (இந்நூலையும் சேர்த்து) 12 ஆகும். அவற்றுள் "பாம்பன் சுவாமிகள் பெருமை" (சைவசித்தாந்தப் பெருமன்ற வெளியீடு) என்ற நூல் தவிர ஏனையவை ஐயா அவர்களின் குடும்பத்தினர் தங்கள் பெற்றோர் நினைவாக நிறுவியுள்ள நடராசன் கனகாம்பு ஜம் அறக்கட்டளையின் சார்பாக, மஹாதேஜோ மண்டல சபையின் ஆதரவுடன் வெளியிடப்பட்டவை. ஐயா அவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும், அறக்கட்டளையின் ஏனைய அங்கத்தினர் கட்கும், மஹாதேஜோ மண்டல சபையினருக்கம் அடியேனின் உளங்கனிந்த நன்றி என்றும் உரித்து.

தஞ்சைப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் "**தாயுமானவர்**" என்ற

தலைப்பில் நூல் எழுதியுள்ளார். அந்நூல் அருள்செல்வர் பொள்ளாச்சி சிவத்திரு நா. மகாலிங்கம் ஐயா அவர்கள் பதிப்பித்துள்ள ஞானபரம்பரை தொகுதி 4 இல் இடம் பெற்றுள்ளது. அந்நூல் அடியேன் இந்நூலை எழுத மிகவும் பயனுடையதாய் இருந்தது. முன்னாள் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கட்கு அடியேனின் நன்றி.

ஞானபரம்பரை தொகுதி 4 என்ற நூலையும் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் அருளிய புலவர் புராணம் என் ற நூலையும் அடியேனுக்குக் கொடுத்து உதவிய, எங்களின் அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய பேராசிரியர் நெல்லை சொக்கலிங்கம் அவர்கட்கும் அடியேனின் நன்றி.

மிகக் குறுகிய காலத்தில் அந்நூலைச் செவ்வனே அச்சிட்டு உதவிய சென்னை எஸ்.எஸ். கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் அடியேனின் நன்றி.

அடியேன் மேலும் பல. நூல்கள் எழுதி வெளியிட, சிவம் பெருக்கும் திருத்தொண்டு ஆற்றி வரும் சைவ ஆதீனங்களின் குருமாகசந்நிதானங்களின் ஆசிர்வாதங்களை வேண்டிப் பணிந்து வணங்குகின்றேன்.

அடியேன் நூல் எழுத உற்ற துணையாய் உதவுகின்ற கணவர் சித்தாந்தத் தொண்டர் மாமணி, திருவாசகச் சுடர் டாக்டர் **செ.ஈ சூரியமூர்த்தி M.S.(U.S.A), Ph.D.(U.S.A)** மேனாள் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் அவர்கட்கு என்றும் நன்றியுடையேன்.

சிவநெறிவழி வாழ்ந்து, அடியேனின் உள்ளத்தில் இளம் வயதிலேயே சைவசமய உணர்வை ஊன்றி வளர்த்து ஆளாக்கி அமரர்களாகிவிட்ட பிறந்த வீட்டுப் பெற்றோரையும், புகுந்த வீட்டுப் பெற்றோரையும் நினைவு கூர்ந்து வணங்குகின்றேன்.

**கோமதி சூரியமூர்த்தி**

உ

ஓம்

குமரகுருதாச குருப்யோ நம

# தாயுமானவரும் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளும்

## 1. தாயுமானவர் வரலாற்றுச் சுருக்கம்

தாயுமானவரின் காலம் 1705-1742 வேதாரண்யம் என்னும் திருமறைக்காட்டில் சைவவேளாளர் குலத்தில் சுமார் 300 வருடங்கட்கு முன் இருசகோதரர்கள் இருந்தனர். மூத்தவர் பெயர் வேதாரண்ய பிள்ளை. இளையவர் பெயர் கேடிலியப்ப பிள்ளை. இவர் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினார். அவ்வூர் பொதுமக்கள் வேண்டுகோளால் அவ்வூரிவிலுள்ள சிவஸ்தல நிர்வாகத்தையும் ஏற்றுத் திறம்படப் பணியாற்றி வந்தார்.

அக்காலத்தில் திருச்சிராப்பள்ளியில் விஜயரங்க சொக்கநாதர் ஆட்சிபுரிந்து வந்தார். அவர் ஒரு நாள் கடலில் நீராடவும், வேதாரண்யத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வழிபடவும் அவ்வூருக்கு யாத்திரை சென்றார். கேடிலியப்ப பிள்ளை அரசரைக் கோயில் மரியாதையுடன் வரவேற்றார். அரசர் அங்கிருக்கும் வரை கேடிலியப்பபிள்ளை வழிபாடு செய்து வைத்து பல உபசாரங்களும் செய்து வந்தார். மன்னர் இவரது கோயில் நிர்வாகத் திறமையையும் புலமையையும் கண்டு, அவரைத் திருச்சிராப்பள்ளிக்கு வந்து அரசாங்கத்தின் சம்பிரத் உத்தியோகத்தை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினார். கேடிலியப்பபிள்ளை கோயில் நிர்வாகத்தைத் தகுதி வாய்ந்த வேறு ஒருவரிடம் ஒப்படைத்து விட்டுத் திருச்சி செல்லத் தீர்மானித்தார். இவரது மனைவி கெசவல்வியம்மை. இவர்களது மூத்த மகன் சிவசிதம்பரம். கேடிலியப்ப பிள்ளையின் தமையனாருக்கு மகப் பேறு இல்லாததால் சிவசிதம்பரத்தை மிகவும் நேசித்தனர். சிவசிதம்பரத்திற்கும் பெரியப்பா, பெரியம்மாவிடம் மிகுந்த பற்று உண்டாயிற்று கேடிலியப்பபிள்ளை திருச்சி

செல்லுமுன் தன் மகனைத் தமையனுக்குச் சுவீகாரமாகக் கொடுத்து விட்டார்.

கேடிலியப்ப பிள்ளையும், அவரது மனைவியும் காலை, மாலை, இரண்டு வேளையிலும் மலைக்கோட்டையிலுள்ள் தாயுமானவ சுவாமிகளிடம் தங்கட்கு ஒரு மகப்பேறு கிடைக்கப் பக்தியுடன் பிரார்த்தனை செய்து வந்தனர். தாயுமானவ சுவாமிகளின் திருவருளால் ஓர் ஆண் மகவு பிறந்தது. சுவாமிகளின் திருவருளால் பிறந்த அக்குழந்தைக்குப் பெற்றோர்கள் **தாயுமானவன்** என்று பெயர் சூட்டினர்.

தாயுமானவனுக்கு ஐந்து வயது நிறைந்ததும் கல்வி கற்க பாடசாலையில் சேர்த்தனர். தாயுமானவனுக்குக் கல்வி கற்பித்தவர் திருச்சி சிற்றம்பல தேசிகர் ஆவார். தாயுமானவனுக்குக் கலைஞானம் ஓங்கி வளர்ந்தது. தமிழிலும், வடமொழியிலும், கணித சாத்திரத்திலும், சோதிட சாத்திரத்திலும் புலமை பெற்றார். தேவாரம், திருவாசகம், சைவ ஆகமங்கள், திருப்புகழ் முதலிய சைவ இலக்கியங்களைக் கசடறக் கற்றுத் தேர்ந்தான். இவருக்கு சிறு வயதிலேயே உலகியலில் நாட்டம் இல்லை. தெய்வ பக்தி மிகுந்தது.

தனக்கு ஞானோபதேசம் செய்ய ஒரு தீட்சா குருவை நாடினார். திருச்சி மௌன குரு இவரிடம் சும்மா இரு என்று மட்டுமே கூறினார். அதையே இவர் உபதேசமாகக் கொண்டார். தக்க வயது வந்ததும் பெற்றோர்கள் அவருக்குத் திருமணம் செய்விக்க விரும்பினர். இவருக்கு அதில் விருப்பமில்லாதபோதும் பெற்றோரின் விருப்பத்திற்காக உடன்பட்டார். மனைவி பெயர் மட்டுவார் குழலி என்பதாம். இவரது தந்தை சிவனடி சேர்ந்ததும், மன்னர் தந்தையின் உத்தியோகத்தை இவர் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினார். தாயுமானவன் அரசரின் வேண்டுகோளை மறுக்க இயலாமல் அரை மனத்துடன் அப்பொறுப்பை ஏற்றுக் கொண்டான். அதில் கவனம் செலுத்தி, தந்தையை விட சிறப்பாக நிர்வாகம் செய்து வந்தார்.

இவரது திருமணவாழ்விற்கு அணிகலனாக ஓர் ஆண் குழந்தை பிறந்தது. கனக சபாபதி எனப் பெயரிட்டனர். இவன் பிறந்த சில வருடங்களில் தாய் சிவனடி சேர்ந்தார். எனவே தாயுமானவனின் தமையன் சிவசிதம்பரமும், அவர் மனைவியும் இச்சிறுவனைப் பேணும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். மனைவி இறந்தபின் தாயுமானவர் துறவியாகிப் பல திருத்தலங்கட்குச் சென்று வழிபட்டுப் பாடல்கள் இயற்றினார். சந்நியாச ஆசிரமம் பூண்ட நாள் முதல் தாயுமானவர் வெறும் கௌபீனதாரியாக விளங்கினார். இவர் துறவு பூணும்போது இவருக்கு வயது முப்பது தான். பிச்சை எடுத்து அன்னத்தைப் புசித்து, பிரபஞ்ச வாழ்வில் கருத்தைச் செலுத்தாது இறைச் சிந்தனையிலேயே திளைத்திருந்தார்.

தன் இறுதிக் காலத்தில் இராமநாதபுரம் வந்து நிட்டையில் ஆழ்ந்தார். சுபகிருது வருடம் தை மாதம் விசாக நட்சத்திரத்தன்று ஸ்ரீதாயுமான சுவாமிகள் மகா சமாதி அடைந்தார். இவரது திருமேனி இராமநாதபுரத்திற்கு வெளிப்பட்டணமாக இருக்கும் பகுதியான லட்சுமிபுரம் என்ற ஊரில் சமாதி வைக்கப்பட்டு திருக்கோயில் எழுப்பப் பெற்றிருக்கிறது.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய புலவர் புராணத்தில் 37. தாயுமான சுவாமி சருக்கத்தில் 27 செய்யுட்களில் தாயுமானவரின் வரலாறு கூறப்பட்டுள்ளது.

தாயுமானவர் மௌனகுரு தனக்கு உபதேசம் செய்ததை தன் மௌனகுரு வணக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். தாயுமானவர் தன் குருவை “**மந்த்ரகுரு, யோக தந்த்ர குரு, மூலன் மரபில் வரும் மௌனகுரு**“ எனப் போற்றுகின்றார் (5. மௌனகுரு வணக்கம். செ.1-10). மேலும் “**எந்தை வட ஆல் பரமகுரு வாழ்க, வாழ அருளிய நந்திமரபு வாழ்க, என்னுடைய குருநாதர் மௌனகுரு வாழ்க**” என வாழ்த்துகின்றார் (மேலது செ.2).

## 2. தாயுமானவர் அருளிய பாடல்கள்

தாயுமானவர் 1454 பாடல்களை அருளிச் செய்துள்ளார். அவை தொகை மாலை 587, கண்ணிகள் 865, அகவல் 1, வண்ணம் 1 ஆக 1454. இதனை,

**"விண்ணுறு தேவர்கள் முனிவர் கணங்கள் சித்தர்**
**புகழ் மௌனி வியப்பால் நானத்**
**தண்ணுறு தண்டமிழ் மாலை ஐந்நூற்றெண்**
**பத்து ஏழும் தாயுமானோன்**
**எண்ணுறுங் கண்ணிகள் ஏண்ணூற்று அறுபத்து ஐந்து**
**அகவல் வண்ணம் இரண்டு பாடி**
**மண்ணுறு நால்வகை மாந்தர் தமக்காகப்**
**பக்குவர்பால் வைத்தான் அன்றே"**

என்ற பழம்பாடலால் அறியலாம். இவரது பாடல்கள் **பரசிவ வணக்கம் முதல் ஆனந்தக் களிப்புவரை 56 தலைப்புக்களில்** தொகுக்கப் பெற்று, தாயுமானவரின் பாடல்கள் என்ற தலைப்பில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

பாடல்கள் எளிமையாகப் பொருள் விளங்கும்படி உள்ளன. சைவசதித்தாந்தத் தத்துவக் கருத்துக்கள் மிக்கவை. தாயுமாவரின் மாணவர் அருளையர் இவரைப் போற்றிப் பாடியுள்ள **அருள் வாக்கிய அகவலில்** தாயுமானவரின் பண்பு நலத்தையும், புலமையையும் எடுத்துரைக்கின்றார்.

**திருமூலர் மரபில் எழும் குரு மவுனி திருவருளைத் திரட்டி வாரி**
**அருளூறும் ஆனந்த அநுபூதிச் சாரமெல்லாம் அருந்தி நாளும்**
**மருளோடும் இருளோட மறைக்காட்டின் எழுந் தாயுமானோன் ஞானப்**
**பொருளாகுஞ் சித்தாந்தத் தமிழ்மறையை உலகம் உய்யப்**
**பொழிந்தான் மாதோ**

என்று தாயுமானவரின் பாடல்களைச் "**சித்தாந்தத் தமிழ்மறை**" எனப் போற்றுவது மரபு. **தோத்திரப் பாடல்களால்**

**சாத்திரங்கள் விளக்கியவர் தாயுமானவர்** என அறிஞர் எம்.எஸ். பூரண லிங்கம் பாராட்டுவார். தாயுமானவரின் பாடல்கள் பக்திச்சுவையுடன் மிளிர்கின்றன. இவரது பாடல்கள் சைவசமயத் தத்துவத்தின்அடிப்படையில் அமைந்திருந்த போதிலும், இவர் காலத்தில் மக்கள் சமயப் பூசல்கள் செய்து ஒற்றுமையின்றி வாழ்வதை அறிந்து வருந்தி, மக்கள் ஒருமையுணர்வோடும், சமயப் பொதுமையுடன் வாழ வேண்டும் என நினைத்துப் பாடியதால் **அவை சமரச நோக்கு** உள்ளவையாக விளங்குகின்றன. இவரது பாடல்கள் உவமைநலம் மிக்குப் படிப்போர்க்கு இன்பம் தரும். பாடல்கள் படிப்போரின் உள்ளத்தை உருக வைக்கும். **இன்பத் தமிழுக்கு இலக்கியமாக விளங்கியவர் தாயுமானவர்** என் மகாகவி பாரதியார் போற்றுகின்றார். பேராசிரியர் மு.வரதராசனார் “பாரதியாரின் பாடல்களில் வருகின்ற உருவகங்கள் மிக நீண்ட உருவகங்கள், உவமைகள், தொடர்ச்சியான அடுக்கடுக்கான உவமைகள் இவற்றை எல்லாம், பார்க்கும்போது, அவருடைய பெரும்புலமை தெளிவாகின்றது”. என்று தாயுமானவரின் உவமைநலச் சிறப்பைப் போற்றுவார் (முனைவர் இ.சுந்தரமூர்த்தி, தாயுமானவர், ஞானபரம்பரை தொகுதி 4, பக் 87-88)

## 3. தாயுமானவர் பாடல்களுக்கும், பாம்பன் சுவாமிகளின் பாடல்களுக்கும் உள்ள ஒப்புமைகள்

தாயுமானவர் வேதாந்த சித்தாந்த சமரச நிலை கண்டது போல, பாம்பன் சுவாமிகளும் கண்டவர். இருவர் பாடல்களிலும் பனுவல் தலைப்புக்களில் சில ஒப்புமைகள் உள்ளன. அவை கீழேயுள்ள அட்டவணையில் சுட்டிக் காட்டப் படுகின்றன.

| தாயுமானவரின் பனுவல்கள் | சுவாமிகளின் பனுவல்கள் |
|---|---|
| பரிபூரணானந்தபோதம் (2) | பரிபூரணானந்தபோதம் (மூன்றாம் மண்டல நூல்) பரிபூரணானந்துபோதம் (5, திருப்பா, 1.4) |

| | |
|---|---|
| கருணாகரக் கடவுள் (6) | கருணாகரவேலன் (1.30)<br>கருணைத்தேவு<br>(5.திருப்பா, 2.57) |
| ஆனந்தமான பரம் (8) | ஆனந்த முகில் (1.18)<br>ஆனந்தமான பொருள்<br>(5. திருப்பா 2.8) |
| சச்சிதானந்த சிவம் (11) | சண்முகானந்த சிவம் (1.15) |
| பெரிய நாயகி (39) | பெரியசாமி (5. திருப்பா 2.15) |
| பராபரக்கண்ணி (43) | பரஞ்சுடர்க்கண்ணி (1.67)<br>பரம்பொருட்கண்ணி (1.72) |
| ஆனந்தக் களிப்பு (56) | ஆனந்தக் களிப்பு |

இருவரின் பாடல்களில் காணப்படும் கருத்து ஒப்புமைகள் சிலவற்றைக் காண்போம்.

**சைவ சமயத்தைப் போற்றுதல் :**

சைவசமயம் ஒன்றே உண்மையான சமயம். அச்சமயம் ஆதி முதல்வனாகிய பழம்பொருளை வெளிப்படையாகக் காட்டுகின்றது. இவ்வுண்மையைக் கைவிட்டுப் புறச்சமய நெறியிலே ஒழுக வேண்டா. முக்தி தரும் அத்தெய்வ சபையைக் காண்பதற்குச் "**சேரவாரும் செகத்தீரே**" என்று அழைப்பார் தாயுமானவர்.

**"சைவ சமயமே சமயம்**
**சமயாதீதப் பழம் பொருளைக்**
**கை வந்திடவே மன்றுள் வெளி**
**காட்டும் இந்தக் கருத்தை விட்டுப்**
**பொய் வந்து உழலும் சமயநெறி**
**புகுதல் வேண்டாம் முக்தி தரும்**
**தெய்வ சபையைக் காண்பதற்குச்**
**சேரவாரும் சகத்தீரே"**

– (தாயுமானவர் பாடல்கள் 30. காடும் கரையும் செ.2)

**எனத் தாயுமானவர் சைவ சமயமே உண்மையான நெறி என்பதை உணர்த்துகின்றார்.**

பாம்பன் சுவாமிகளும் சைவசமயமே சிறந்தது என்ற கொள்கையுடையவர். சுவாமிகள் எழுதியுள்ள வியாசங்கள் 32. அவற்றுள் ஒன்று **சமயங்களைக் குறித்த வியாசம்.** அக்கட்டுரையில் எல்லாச் சமயங்களிலும் மேலானது சைவசமயம் என்பதற்குச் சுவாமிகள் முற்கூறிய தாயுமானவரின் பாடலை மேற்கோளாகக் காட்டியுள்ளார். மேலும் தத்துவப் பிரகாச பாடல், சிவஞான தேசிகர் அருளிய பஞ்சாட்சர பதி பசு பாச விளக்கப் பாடல், சிவயோக சாரப் பாடல், உமாபதி சிவம் அருளிய சிவப்பிரகாசப் பாடல் முதலியாற்றை மேற்கோள்காளாகக் காட்டியுள்ளார்.

மேலும் பல் சமயத் தத்துவப் புலமை வாய்ந்த பாம்பன் சுவாமிகள் "**சைவ சித்தாந்த நூல்கள் மரபாய் விளக்கும் நெறி தெளிவே மயக்கு அன்று**" என்றும் (1. திருவிராமேச்சுரப் பதிகம் செ.7), "**சைவ சித்தாந்தம் ஒன்றே என் கருத்துக்கு இசைந்த நெறி**" என்றும், "**குற்றத்தின் நீங்கிய சைவதிச்தாந்தம்**" என்றும் சைவசித்தாந்தத்தைச் சிறப்பித்துக் கூறியுள்ளார் **சைவசித்தாந்த** "**ஞானபானு**", என்று சுவாமிகள் போற்றப்படுகிறார்.

### சைவசமயாசாரிகள் நால்வரைப் போற்றுதல்

**"வெம்பந்தம் தீர்த்து உலகு ஆள் வேந்தன் திருஞான சம்பந்தனை அருளால் சாருநாள் எந்நாளோ" "ஏரின் சிவபோகம்" இங்கு இவற்கே என உழ வாரம் கொள் செங்கையர்தாள் வாரம் வைப்பது எந்நாளோ"**

**"பித்தர் இறை என்று அறிந்து பேதைபால் தூது அனுப்பு**
**வித்த தமிழ்ச் சமர்த்தர் மெய் புகழ்வது எந்நாளோ"**

**"போதவூர் நாடு அறியப் புத்தர்தமை வாதில் வென்ற**
**வாதவூர் ஐயன் அன்பை வாஞ்சிப்பது எந்நாளோ"**

**(எந்நாட்கண்ணி, அடியார் வணக்கம் 1-4)**

**எனத் தாயுமானவர் நால்வரைப் போற்றுகின்றார்.**

**பாம்பன் சுவாமிகளும்,**

**"சண்பை நகர்த் திருஞானசம்பந்தரைப் பார்த்தது போல்
கண் குளிர்வி என்னையும் நீ கருதி நிதம் பாராயோ"**

**"வாகீசர் பனுவல் எல்லாம் வள்ளுரைரையைக் கேட்டது போல்
ஓசையின் என் பனுவலையும் முற்று நீ கேளாயோ"**

**"சுந்தரத்தின் முடியில் அடிசூட்டி ஆட்கொண்டதுபோல்
என்றனக்கும் சேவடிப் பூ இரண்டினையும் சூட்டாயோ"**

**"வாத வூரடிகட்கு மனம் உவந்து சொற்றதுபோல்
சீதமலர்ச் செவ்வாயைத் திறந்து எனக்கும் சொல்லாயோ"**

(2. திருவலங்கல் திரட்டு, இராண்டாம் கண்டம் 3 வது
கலியியல், செ. 27)

என சண்பை நகர் எனப்படும் சீகாழியில் அவதரித்த திருஞானசம்பந்தப் பெருமானைக் கண்குளிரக் கண்டு அருளியது போன்றே என்னையும் கருதி ஏற்றுக்கொண்டு நாள்தோறும் என்னைப் பார்க்க மாட்டாயா?

(வாகீசர் என்பது திருநாவுக்கரசர் முற்பிறவியில் முனிவராய் இருந்தபோது உள்ள பெயர்) திருநாவுக்கரசர் பாடிய பதிக மாலைகளை எல்லாம் நின் செவிகளில் தங்கியிருக்குமாறு ஆர்வத்துடன் கேட்டது போல், என் பாடல்களையும் மகிழ்ச்சியுடன் உற்றுக் கேட்க மாட்டாயா நீ ?

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தலையில் திருவடியை வலுக்கட்டாயமாகச் சூட்டி ஆட்கொண்டது போன்றே, என் தலை மேலும் நின் திருவடித்தாமரைப் பூக்கள் இரண்டையும் சூட்டமாட்டாயா ? (இதனைத் திருவடி தீக்கை பெற்றது என்பர்) .

மாணிக்கவாசகப் பெருமானுக்கு மனம் உவந்து திருப்பெருந் துறையில் ஞானோபதேசம் செய்தது போன்று, உனது குளிர்ச்சிமிக்க மலர் போன்ற சிறந்த வாயைத் திறந்து எனக்கு

உபதேசம் செய்ய மாட்டாயா? என முருகப் பெருமானிடம் பிரார்த்திக்கும் முறையில் நால்வரைப் போற்றுகின்றார்.

## இறைவனின் இயல்புகள்

**போக்கு வரவு அற்றவன்**

**தாயுமானவர்**

இறைவனைப் போக்கு வரவு அற்ற பொருள் என்பார்.

"**போக்கு வரவற்ற பொருள் அணைவது எந்நாளோ**" (எந்நாட்கண்ணி, 9. பொருள் இயல்பு, 4)

"**போக்கு வரவு இல்லாத இன்பமாய் நின்ற பூரணம்**" என்கின்றார்

பாம்பன் சுவாமிகளும்,

"**போக்கொடு வரத்தும் இல்லாத ஒரு பூரணப் பொருள்**"

என்கின்றார். (1.27 உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் பொருள் சதகம், செ.30)

## இறைவன் வியாபகப் பொருள்

"**பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கமற**
**நிறைகின்ற பரிபூரணானந்தமே**"

– (தாயுமானவரின் பாடல்கள், 2. பரிபூரணானந்தம் செ.1 –10) என்று இறைவனின் பரிபூரணத் தன்மையை (வியாபகத்தை) வியந்து பாராட்டுகின்றார் தாயுமானவர்.

சுவாமிகள் அருளிய "**அகண்டபரம்**" என்னும் பதிகம், பாடல் இறுதிதோறும் "அகண்ட பரமே" என முடிகின்றது (5. திருப்பா, 2 ஆம் புத்தகம், 54 அகண்டபரம் செ.1–10) என்று முடிகின்றது. அதற்குப் பிரிவற்று எங்கும் வியாபித்துள்ள பரம்பொருள் எனப் பொருளாகும்.

மேலும் பாம்பன் சுவாமிகள்,

**போக் கொடு வரத்தும் இல்லாத ஒரு பூரணப் பொருள்**
– (1.27. உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம், செ. 30)

"**எங்கும் நிறை பிரமம்**" - (1.3. திருச்செந்தில் செ.5)

"**சராசரம் எல்லாம் நிறை பராபர**"
- (1.15 சண்முகானந்த சிவம், செ.1–10)

"**உலகம் எங்கும் மல்கு பரப்பிரமமே**"
– (1.22. கதிரேசன் செ.1)

என்று பட பாடல்களில் இறைவன் எங்கும் நிறைந்த வியாபகப் பொருள் எனக் குறிப்பிடுகின்றார்.

**பரம்பொருள் வாக்கிற்கும், மனத்திற்கும் எட்டாதது**

இறைவன் மனத்திற்கும், சொல்லிற்கும் எட்டாதவன். பேரின்பமயமாய் விளங்கும் அவனை ஞானாசிரியர் காட்டிட அறியலாம் என,

"**மனம் ஆதிக்கு எட்டாத பேரின்ப மயமாய் ஞானக்**
**குரு அருளால் காட்டிட**"
(பொருள் வணக்கம்,செ.3)

என்று தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

இறைவன் தோற்றம் இல்லாதவன். அநாதியாய் மலத்தினின்றும் நீங்கியவன் உருவம் இல்லாதவன் நோயில்லாதவன், தூய்மையானவன், அன்பில்லாதவர்க்கு சேய்மையானவன், அன்புடையார்க்கு அண்மையில் உள்ளவன். எவற்றிற்கும் நிலைக்களம் ஆனவன். மனம் மொழிக்கு எட்டாதவன், அறிவுருவானவன், இன்ப உருவானவன், அறிவுறுவாய் நின்ற நிலை பெற்ற ஒரு முதலை ஆனந்தத்தொடக்கத்தினை உடைய பேராகாயத்தினை மனத்தால் வழிபடுவோம். என,

**"நித்தியமாய் நின்மலனாய் நிட்களமாய்**
**நிராமயமாய் நிறைவாய் நீங்காத**
**சுத்தமுமாய் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரிய நிறை**
**சுடராய் எல்லாம்**
**வைத்திருந்த தாரகமாய் ஆனந்த மயமாகி**
**மனம் வாக்கிற்கு எட்டாச்**
**சித்துருவாய் நின்ற ஒன்றைச் சுகாரம்பப் பெருசிவனியைச்**
**சிந்தை செய்வோம்".**

(பொருள் வணக்கம், செ.1) என தாயுமானவர் இறை இயல்புகளைக் கூறுகின்றார்.

"**ஆதி அந்தம் காட்டாத**" என்று தொடங்கும் பொருள் வணக்கம் பாடலிலும் தாயுமானவர்இறைவன் மனம், வாக்கிற்கு எட்டாதவன் என கூறுகின்றார்.

பாம்பன் சுவாமிகளும்,

"**வாக்குமனத்தால் அளப்பரிய உனை**"
(1.10 திருவருணை, செ.2)

"**வாக்கிற்கும் மனத்துக்கும் எட்டாத அத்துவிதமாய்**
**உள்ள சிவன்**"

- (1.27 உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம் செ.2)

"**ஆத்தர் சொல்லானும் எணும் மனத்தாலும்**
**அளக்க ஒண்ணாப் பூர்த்தி எனப்படும் வானவன்**"

(1.31. சிகிவாகனனே, செ.4) என இறைவன் வாக்கிற்கும், மனத்திற்கும் எட்டாத மெய்ப்பபொருள் என்கின்றார்.

வாக்கு என்பது பாசஞானத்தையும், மனம் என்பது பசு ஞானத்தையும் குறிக்கும், "**பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரன்**" என்று அருணந்தி சிவாசாரியாரும் (சிவஞான சித்தியார் சுபக்கம், செ.292).

“**பாசமா ஞானத்தாலும் படர்பசு ஞானத்தாலும் ஈசனை உணர ஒண்ணா**” என்று உமாபதி சிவம் ( சிவப்பிரகாசம் செ.84) கூறுவதும் இங்கு நினைவு கூரத்தக்கன.

**இறைவன் ஞானவடிவினன்**

இறைவன் அருவம், உருவம், அருவுருவம் என இவற்றிற்கெல்லாம் அப்பாலாய் அருள்வடிவாய் நிற்கும் பேரொளி என்று தாயுமானவர் கூறுகின்றார்

“**அருளாய் நிறைந்து இலகு சோதியே**
**தொந்த ரூபமுடன் அரூபம் ஆதிகுறி**
**குணம் இறந்து வளர் வஸ்து**”

- (13. சிற்சுகோதய விலாசம், செ.3) என்கின்றார்.

“**தண் அருள் வடிவினன்** – (25, எனக்கு எனச் செயல், செ.11, 15)

“**ஞான நாயக**” – (மேலது, செ.20) என்று தாயுமானவன் இறைவன் ஞான வடிவினன் என்கின்றார்.

பாம்பன் சுவாமிகள் “**ஞானதெய்வம்**” (5,திருப்பா, 2ஆம் புத்தகம், 42. ஞானதெய்வம்) என்று ஒரு பதிகமே அருளிச் செய்துள்ளார். மேலும் “வேதாந்தமாகிய உபநிடதம் உரு, அரு, அருவுரு என்று கூறவும் பொருந்தாமல் முருகப் பெருமானை ஒப்பற்ற **நித்த ஞானவடிவினன்** எனவும் அரற்றும்” என்று குமரவேளை சுவாமிகள் போற்றுகின்றார் (4. குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி செ.86).

நான்கு வேதங்களும் தோன்றுவதற்கு வித்தாக விளங்கும் **அருளே வடிவான இறைவன்** என பாம்பன் சுவாமிகள்,

“**வேதம் முதலா விளங்கும் அருள் இறை**”
(1.68. பொன்மயிற்கண்ணி, 2) என்கின்றார்.

“**முத்தொழில் ஆற்றுபவன்**
**ஆக்கி அளித்துத் துடைக்கும் - தொழில்**
**அத்தனை வைத்தும் எள் அத்தனையேனும்**
**தாக்கு அற நிற்கும் சமர்த்தன்**”
(56, ஆனந்தக்களிப்பு, செ.19)

என இறைவன் படைத்தல், காத்தல், ஒடுக்குதல் என முத்தொழில் ஆற்றினாலும் அதனால் பாதிக்கப் படாதவன் என தாயுமானவர் கூறுகின்றார்.

“**வேண்டுவ படைத்தாய் நுந்தை**
**விதிப்படி புரந்தான் அத்தைக்**
**காண் தக அழித்தான் முக்கண் கடவுள்தான்**”
– (15. தேன்முகம், செ.2)

என பிரமன் படைத்தலையும், அவன் தந்தையாகிய திருமால் காத்தலையும், முக்கண்ணனான ருத்திரன் ஒடுக்குதலையும் செய்வதைத் தாயுமானவர் கூறுகின்றார்,

பாம்பன் சுவாமிகளும்,

“**அயன் அரி அரன் திருவாய் இருந்து உனபடி**
**ஆக்கியம் ஓம்பியும் அழிக்கும்**”
– (1.49 ஞாயாவாதிகள் விளக்குவர் செ.8)

“**பல்புவி படைக்கப் படைப்பவை அளிக்கப்**
**பார்முதல் அனைத்தையும் துடைக்க**
**மல்கு முத்திறத்தார் தொழில் முதல் அரசாம்**”
– (1.54 துறவுநோக்கம். செ.2)

இறைவன் முத்தொழில்களைத் தாமே செய்வதையும், மும்மூர்த்திகளைக் கொண்டு செய்விப்பதையும் உணர்த்துகின்றார்.

**உயிர் என்றும் உள்ளது :**

**இறைவன் என்று உள்ளானோ அப்போதே உயிர்களும் உள்ளன.**

"**என்று உளை நீ அன்று உளம் யாம்**"
(42. கல் ஆல்ன், செ.17)

என்று தாயுமானவர் கூறுகின்றார்.

பாம்பன் சுவாமிகள் "**அநாதி உயிர்**" (2. திருவலங்கல் திரட்டு, இரண்டாம் கண்டம், 2 ஆசிரியவியல், செ.10) அநாதி என்றால் தோற்றமும் அழிவும் இல்லாதது, என்றும் நிலைத்திருப்பது எனப் பொருள்படும்.

**உயிர்கள் அளவற்றன :**
"**அண்டமுமாய் பிண்டமுமாய் அளவிலாத**
**ஆருயிர்க்கு ஓர் உயிராய் அமர்ந்தாய்**"

-(24 ஆசை எனும், செ.12)

என உயிர்கள் அளவற்றன. உயிர்க்குள் உயிராய் இறைவன் உள்ளான் என்று தாயுமானவர் கூறுகின்றார்.

பாம்பன் சுவாமிகள்

"**எண்ணில்லாத பசுக்கள்**" - (3. பரிபூரணானந்த போதம், பதி பசு பாச யதார்த்த விளக்கப் படலம், செ. 53) என்று கூறுகின்றார்.

**உயிர்கள் இறைவனுக்கு அடிமை**

"**வைத்திரு இங்கு என்னை நின் அடிக்குடியாக்**"
- (24. ஆசை எனும், செ.37)

"**அம்பொன் மாமலர்ப் பதத்தையே**"
**துணையென அடிமை நம்பினேன்.**
- (25. எனக்கு எனச் செயல், செ.17)

“**எனக்கு ஓர் சுதந்திரம் இல்லை**” – (27. பாயப்புலி, செ.16) என்று தாயுமானவர் உயிர்கள் அடிமை என உணர்த்துகின்றார்

பாம்பன் சுவாமிகள்

“**அருளை வழங்கும் முதல்வனாம் ஈசன் ஆட்சி செய்யும் அரசன். அருளைப் பெறும் உயிர்க் கூட்டங்கள் அம்முதல்வனுக்கு ஆட்பட்டு நிற்க்கும் அடிமைகள்**” என்கின்றார்.

(2. திருவலங்கல் திரட்டு, இரண்டாம் கண்டம், 3. கலியியல் செ.35).

சுவாமிகள்
மற்றொரு பதிகப் பாடலில்

**உயிர்கள் எக்காலத்துக்கும் இறைவனுக்கு அடிமை**
(1.16 திருக்குன்று தோறாடல், செ.8). என்கின்றார்

## உயிர்களின் பிறவி

உயிர்கள் என்றும் அநாதியானவை. ஆதலால் அவை இறைவனால் படைக்கப்படவில்லை. உயிர்கள் செய்த வினைப் பலன்களை அனுபவிக்க இறைவன் தநு (உடம்பு), கரண (கருவிகள்), புவன (உலகம்) போகங்களைப் (இன்ப துன்ப நுகரச்சிப் பொருட்கள்) படைக்கின்றான். வினைக்கேற்ப உயிர்கட்குத் தூல உடம்பு இறைவனால் கொடுக்கப்படுவதே பிறப்பு ஆகும். வினையின் காரணமாகவே உயிர்கள் பல்வேறு பிறவிகளை அடைகின்றன.

தாயுமானவர்,
“**தொல்லை வினைக்கு ஈடாய்ச் சுழல்கின்ற நான்**”
(28. உடல் பொய்யுறவு, செ.30) என்கின்றார்.

தாயுமானவர்,
“**எத்தனை பிறப்போ எத்தனை இறப்போ**
**எளியனேற்கு இதுவரை அமைத்தது**”
– (24. ஆசை எனும், செ.37) என்று கூறுவது உயிர்கள் கன்மத் தொடர்ச்சியால் பல பிறப்புக்களை எடுப்பதை உணர்த்தும்

"**எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்**"

(சிவபுராணம், வரி – 31)

என்று மாணிக்கவாசகர் கூறுவது இங்கு நினைவுகூரத் தக்கது.

**பாம்பன் சுவாமிகளும்**

"**கரும வழியாய் வரும், சனன வேதனை**" (1.2 திருப்பரங்கிரி,செ.6)

"**வினைப்படி உயிரையும் உடம்பையும் சேர்த்து**" (1.6 சிவலோக சுந்தர மாலை, செ.26) என்று இறைவன் வினைப்படி உயிரையும், உடம்பையும் சேர்ப்பதையும், பிறவி வினைவழியாய் வருவதையும் உணர்த்துகின்றார்.

**பிறவிகளின் வகைகள்,**

"உயிர்கள் நால்வகைத் தோற்றம் ஏழுவகைப் பிறப்பு எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதமாகிய பிறப்பை அடைவதாக உமாபதிசிவம் கூறுகின்றார் (சிவப்பிரகாசம் , செ.47)

**நால்வகைத் தோற்றமாவன :**

| | | |
|---|---|---|
| 1. | அண்டசம் | – முட்டையில் பிறப்பன |
| 2. | சுவேதசம் | – வேர்வையில் பிறப்பன |
| 3. | உற்பிச்சம் | – வித்தில் பிறப்பன |
| 4. | சராயுசம் | – கருவில் பிறப்பன |

**ஏழுவகைப் பிறப்புக்களும் யோனி பேதங்களும் :**

| | | |
|---|---|---|
| 1. | தேவர் | – பதினொரு லட்சபேதம் |
| 2. | மனிதர் | – ஒன்பது லட்சபேதம் |
| 3. | விலங்கு | – பத்து லட்சபேதம் |
| 4. | பறவை | – பத்து லட்சபேதம் |
| 5. | ஊர்வன | – பதினைந்து லட்ச பேதம் |
| 6. | நீர்வாழ்வன | – பத்து லட்ச பேதம் |
| 7. | தாவரம் | – பத்தொன்பது லட்ச பேதம் |

"**பார் முதல் அண்டப் பரப்பு எலாம் நிறுவி அண்டசம் முதல் ஆம் எண்தரு நால்வகை ஏழுபிறவியில் தாழாது ஓங்கும்**" (55. அகவல் வரி 8-10) என்று தாயுமானவர் உயிர்கள் நால்வகைத் தோற்றம், ஏழுவகைப் பிறவி அடைவதைக் குறிப்பிடுகின்றார்.

பாம்பன் சுவாமிகள்,

"**அண்ட நேமி வியர்வை பை மானசமொடு**
**ஐந்தெனப் புகலும் யோனி சேர் ஆவி**"
(2. திருவலங்கல் திரட்டு, 2 ஆம் கண்டம்,
2. ஆசிரியவியல், செ.157)

என்கின்றார். முட்டை, விதை, வியர்வை, கருப்பை, மானசம் என்னும் ஐந்தன் இடமாக உயிர்கள் பிறக்கும் என்கின்றார் (நேமி என்பது வட்டம் எனப் பொருள்படினும், சுவாமிகள் இங்கு விதை என்னும் பொருளில் அச்சொல்லைக் கையாண்டுள்ளார்.

தாயுமானவர் நால்வகைத் தோற்றம் எனக் கூற, சுவாமிகள் மானசம் என்பதைச் சேர்த்து தோற்றம் ஐந்து என்கின்றார். பிரம்மா 9 சீடர்களை உருவாக்கி இந்த **நவபிரஜாபதிகளை** ஆய கலைகள் அத்தனையும் கற்றுக் கொள்ள வைத்தார். அதில் ஒரு சீடன் தான் தட்சன். மானச புத்திரர்களைப் படைக்கும் வித்தையைக் கண்டறிந்தார். உடல், சேர்க்கை இல்லாமல் ஆண், பெண், மனித அனுக்களை மானசீகமாகவே சேரவைத்து மானச புத்திரனை உருவாக்கும் கலை அது. மானச புத்திரனை உருவாக்குவதைத் தடுத்தது மகாவிஷ்ணு என்று புராணம் கூறுகின்றது (சொன்னது நம்மாளு, ராஜரிஷி, ப.99), புராணநூல்கள் பலவற்றிலும் நிரம்பிய புலமை வாய்ந்த பாம்பன் சுவாமிகள் புராணநூலில் கூறப்பட்டுள்ள மானச புத்திரர்களை உருவாக்கியும் கலையை அறிந்தே மானசம் என்பதைச் சேர்த்து தோற்றம் ஐந்து என்று கூறியிருக்கிறார் எனலாம்.

தற்கால விஞ்ஞான அறிஞர்கள் "குளோனிங்" என்று புதிதாகக் கண்டுபிடித்துக் கூறியதை நம் புராணம் முன்பே கூறியுள்ளது

வியப்பாக உள்ளது. இதனால் நாசம் விளையும் என்று அம்முறையில் உயிர்களை உண்டாக்குவதை அமெரிக்கா அரசாங்கம் தடுத்து விட்டது. (ஒரு உயிரின் அணுக்களை எடுத்து அதே அச்சாக இன்னோர் உயிரை உருவாக்குவது குளோனிங்)

## ஆணவம் மலம் - இருள்மலம்

ஆணவம் உயிர்கட்கு அறியாமையை விளைவிக்கும். ஆணவம் உயிரறிவை மறைப்பதால் இருள்மலம் என சித்தாந்த நூல்கள் கூறும் ஆணவத்தின் இயல்புகளைக் கூறும் திருவருட்பயனின் மூன்றாவது அதிகாரம் இருள் மலநிலை எனப்படுகின்றது.

"**அருளால் எவையும் பார் என்றான் - அத்தை**
**அறியாதே சுட்டி என் அறிவாலே பார்த்தேன்**
**இருள் ஆன பொருள் கண்டது அல்லால் - கண்ட**
**என்னையும் கண்டிலேன் என்னேடி தோழி**"-

(56 ஆனந்தக் களிப்பு 13)

என்று தாயுமானவர் ஆணவத்தை இருள் எனக் குறிப்பிடுகின்றார்.

செம்பிற்களிம்பு தோய்ந்தாற்போல் உயிர்களை அஞ்ஞான இருள் பற்றியிருப்பதை

"**குகை அனைய காயத்தின் நடுவுள்**
**களிம்பு தோய் செம்பு அனைய**"
(4.சின்மயானந்த குரு செ.7)

என்று தாயுமானவர் கூறுகின்றார்.

ஆணவ மல இலக்கணம் கூறும் பரிபூரணானந்த போதம், பதி பசு பாச யதார்த்த விளக்கப் படலம், செ. 62க்கு உரை கூறும். இடத்து பாம்பன் சுவாமிகள் முற்கூறிய தாயுமானவரின் பாடலின் பின் இரண்டு அடிகளையே மேற்கோளாகக் காட்டுகின்றார். (பரிபூரணானந்த போதம் , சிவ ஆரியப் பிரகாச உரை, ப. 90)

உலகில் புறஇருள் கண்ணை மறைப்பது போல, ஆன்மாவின் அக இருளாகிய ஆணவம் ஆன்மாவின் அறிவை மறைக்கின்றது. ஆணவம் இருளுக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டாலும், அஃது இருளைவிடக் கொடியது என்பது சித்தாந்தம். ஏனென்றால் இருளானது பிறபொருட்களைக் காட்டாது மறைத்தாலும், தன்னுடைய உருவத்தையெனும் காட்டும். எனவே மக்கள் புறஇருளை உணர்ந்து அதிலிருந்து விடுபட வழிதேடுவர். ஆனால் இவ்வாணவமோ பிற பொருட்களையும் காட்டாது தன்னையும் காட்டாது(திருவருட்பயன்,23). எனவே அதிலிருந்து விடுபட மக்கள் முயற்சிசெய்வதில்லை. எனவே இருளைவிட ஆணவம் கொடியதாகும். எனவே அது "**பொல்லாத ஆணவம்**" எனப்படும். (சிவஞானகசித்தியார் சுபக்கம் செ. 169). தாயுமானவரும் இதனைக் **கொடிய ஆணவம்** என்கின்றார் (13. சிற்சுகோதய விலாசம், செ.2) கண்ணில் ஏற்படும் படலம் என்னும் நோய் கண்பார்வையை மறைக்கும். உயிரறிவை மறைக்கும் ஆணவத்தைத் தாயுமானவர் "**இருள் படலம்**" என்று கூறுகின்றார் (27. பாயும்புலி, செ. 38).

பாம்பன் சுவாமிகள் "**ஆன்மாவிற்கு அஞ்ஞானம் அனாதி**" என்கின்றார். இங்கு அஞ்ஞானம் என்றது அஞ்ஞானத்தை உண்டு பண்ணும் ஆணவத்தைக் குறிக்கும். (3. பரிபூரணானந்த போதம், 1. பதி பசு பாச யதார்த்த விளக்கப் படலம், செ.9). பாம்பன் சுவாமிகள் ஆணவத்தை "**வல் இருள்**" (1.54 துறவு நோக்கம், செ.2) என்றும் "**இருள் தளை**" (2. திருவலங்கல் திரட்டு, 2 ஆம் கண்டம், 1. வெள்ளியியல் செ.62) என்றும் குறிப்பிடுகின்றார் பாம்பன் சுவாமிகள் ஆணவத்தை "**பொல்லா வல் ஆணவத் திமிர்**". (5 திருப்பா, முதல் புத்தகம், 2. ஆனந்த பூர்த்தியுரம் செ.5) என்கின்றார்.

**ஆணவ மல நீக்கம்**

உயிர்கள் தம்மைப் பிணித்துள்ள ஆணவத்திலிருந்து விடுபடுதல் எவ்வாறு என்றகேள்வி எழும் ஆணவம் சடம். அது தானாக நீங்காது. உயிர்களோ ஆணவமல விலங்கால் பிணிக்கப்பட்டுள்ளன. அவை அவ்விலங்கைத் தாமாக கத்தரித்து கொள்ளமாட்டா. இறைவனே அதனைக் கத்திரித்து உயிர்களை விடுவிக்க வேண்டும்.

தாயுமானவர்,

"**ஞானவிளக்கே வல் இருளை நீக்கும்**"
- (48. இல்லையோ என் கண்ணி, 21) என்றும்,

"**என்னுள் துன்று கூர் இருளைத் துரத்திடும் மதியே**"
- (22. சிவன்செயல் செ.9)

என்னுள் நிறைந்துள்ள அஞ்ஞான இருளை இறைவனே ஓட்டுகின்றான் என்கின்றார்.

தாயுமானவர், ஒளிமயமான இறைவனிடம் தன்னிடமுள்ள அஞ்ஞான இருள் நீங்க அவனது அருளை வேண்டுகின்றார்.

"**ஒன்று எனச் சொன ஒண்பொருளே ஒளி**
**இன்று எனக்கு அருள்வாய் இருள் ஏகவே**" என்கின்றார்.
- (18. பொன்னை மாதரை, செ. 72)

மற்றொரு பாடலில் தாயுமானவர்,

"**பேசா அநுபூதியை அடியேன்**
**பெற்றுப் பிழைக்கப் பேர் அருளால்**
**தேஜோமயம் தந்து இனி ஒரு கால்**
**சித்தத்து இருளும் தீர்ப்பாயோ?**"

(20, சொல்லற்கு, அரிய செ.3), என்று இறைவனிடம் வேண்டுகின்றார்.

பாம்பன் சுவாமிகள்,

"**இருள் பொழு ஞான ஆனந்த ஒளியே**"

- (1.27 உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம் செ.3) என்கின்றார் (பொழு-பிளக்கும்).

மற்றொரு பாடலில்,

"**மூல இருள் இரிய என் உளும் முயங்கு**
**செம்பொன் சோதியே**" (மேலது, செ.4)

என்கின்றார். ஆணவத்தை இருளாகவும் இறைவனை அவ்விருளை ஒழிக்கும் ஜோதியாகவும் குறிப்பிடுகின்றார்.

தாயுமானவர் ஒரு பாடலில் இறைவனை அடைதற்குத் தடையாக இருக்கும் ஆணவம், அகங்காரம் ஆகிய களைகளை நீக்கி, மனம் என்னும் நிலத்தைப் பண்படுத்தும் நெறியை உருவகமாக்கி அழகுறக் கூறுகின்றார்.

நிலத்தைத் திருத்தி நல்ல பயிரை விளைவித்தற்கு என்ன செய்ய வேண்டும்? காடுபோல் வளர்ந்திருக்கின்ற மரம், கொடிகளை வேருடன் அழிக்க வேண்டும். நல்ல விதையை ஊன்றி நீரைப் பாய்ச்சி விளைந்தபின் பறவைகளின்றும் அவற்றைக் காத்தால் நல்ல விளைச்சலை நாம் அனுபவிக்க முடியும். சிவானுபவத்தை அனுபவிப்பதற்கும் நிலத்தைப் பண்படுத்துவது போல, உள்ளத்தையும் பண்படுத்த வேண்டும்.

இருள் நிறைந்த ஆணவக் காட்டினை வேருடன் அழித்துத் தூய்மையாக்க வேண்டும். அகங்காரம் என்னும் கல்லைப் பிசைந்து சுத்தப்படுத்தல் வேண்டும். மோனநிலை என்னும் நல்விதையை ஊன்றி அன்பாகிய நீரைப் பாய்ச்சி நன்கு விளைந்துள்ள பயிரை மாயையாகிய பறவை அழிக்காத வண்ணம் பாதுகாத்தால் சிவானுபோகம் என்னும் உயர்ந்த விளைச்சலைப் பெறலாம். அவ்வாறு வாழ்ந்து சிவானுபோகத்தைத் துய்த்து வரும் அடியார்கள் கூட்டத்தில் தன்னைச் சேர்த்து விடும்படித் தாயுமானவர் பரம்பொருளிடம் வேண்டுகின்றார்.

**கார் ஆரும் ஆணவக் காட்டைக் களைந்து அறக்**
**கண்டு அகங்காரம் என்னும்**
**கல்லைப் பிளந்து நெஞ்சு அகமான பூமி வெளி**
**காணத் திருத்தி மேன்மேல்**
**பார் ஆதி அறியாத மோனம் ஆம் வித்தைப்**
**பதித்து அன்புநீர் ஆகவே**
**பாய்ச்சி அது பயிர் ஆகும் மட்டும் மாமாயைவன்**
**பறவை அணுகாத வண்ணம்**
**நேராக நின்று விளைபோகம், புசித்து உய்ந்த**
**நின் அன்பர் கூட்டம் எய்த**

**நினைவின் படிக்கு நீ முன்நின்று காப்பதே**
**நின் அருள் பாரம் என்னும்**
**ஆர் ஆரும் அறியாத சூதான வெளியில் வெளி**
**ஆகின்ற துரியமயமே**
**அண்ட பகிரண்டமும் அடங்க ஒரு நிறைவு ஆகி**
**ஆனந்தம் ஆன பரமே**
– (8. ஆனந்தமானபரம், செ.6)

என்கின்றார் தாயுமானவர்.

பாம்பன் சுவாமிகள், **தொலையாத ஆணவ வனத்தை அருள்எரிகொண்டு சுட்டுத் தகிக்கும் அழலே** - (1.7 திருச்சோலைமலை, செ.7) என்று இறைவனைப் போற்றுகின்றார். ஆணவத்தை காடாகவும், அக்காட்டை எரிக்கும் நெருப்பாகவும் இறைவனை உருவகப்படுத்திக் கூறுகின்றார்.

## வினை நீக்கம்

வினையும், பிறவியும் காரண காரியமாய்த் தொடர்ந்து வரும் என்பது முன்னரே கூறப்பட்டது. கன்மம் தொடர்ச்சியாய் வந்து கொண்டே இருந்தால் அதிலிருந்து விடுபடுவது எவ்வாறு என்ற வினா எழும். உயிர்கட்கு வினைப் பயனைக் கூட்டுவிப்பவன் இறைவன் தானே.

"**விரி வினையும் கூட்டி உயிர்த் திரளை ஆட்டும்**
**விழுப்பொருளே**"
–(14,ஆகாரபுவனம் – சிதம்பர ரகசியம், செ.7)

"**வினை வழியே கூத்தாட்டினையே**"

- (20. சொல்லற்கு அரிய, செ. 10)

என்று தாயுமானவர் கூறுகின்றார்.

வினைப் பலன்களை உயிர்கட்கு கூட்டுவிக்கும் இறைவன்தானே அவர்களை வினையிலிருந்து விடுவிக்க வேண்டும். தாயுமானவர்,

“**வினையைக் கரைக்கும் பரம இன்ப**
**வெள்ளப் பெருக்கே**”
- (23. தன்னை ஒருவர், செ. 2)

என்று இறைவனே உயிர்களின் வினையைக் கரைப்பதாக (நீக்குவதாக) கூறுகின்றார்.

“**பைங்கூழ் வினை தான் படுசாவி ஆக எமக்கு எம்கோன் கிரண வெயில் எய்து நாள் எந்நாளோ**”
– (45. எந்நாள்கண்ணி, தத்துவமுறைமை, 19).

நெற்பயிர் வெயிலில் காய்ந்து பதராவது போல என்னுடைய **பழவினை இறைவன் என்னும் அருள் வெயிலில் காய்ந்து அழிந்து பட்டுப் போகட்டும்** என்று தாயுமானவர் கூறுகின்றார்

“**குறித்த விதம் ஆதியால் கூடும் வினை எல்லாம் வறுத்த வித்தாம் வண்ணம் அருள் வந்திடு நாள் எந்நாளோ**” - (மேலது, 20)

நெருப்பில் வறுத்த விதை மீண்டும் முளைக்காது. அதுபோல் இறைவன் திருவருளில் என்னுடைய வினைகள் யாவும் வெந்து அழிந்து போகட்டும் என்று தாயுமானவர் கூறுகின்றார்.

“**சஞ்சிதமே ஆதி சரக்கு ஆன முச்சேறும் வெந்த பொரி ஆக மேவுநாள் எந்நாளோ**” – (மேலது, 22)

சேறு வெயிலில் உலர்ந்து போகும். அதுபோல சஞ்சிதம், ஆகாமியம், பிராரப்தம் ஆகிய மூன்று வினைகளும், இறைவன் திருவருளால் வெந்து சாம்பலாகட்டும் என்று தாயுமானவர் கூறுகின்றார். “**முச்சேறு**” என்பது சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என்று வினைகளின் மூவகை நிலைகளைக் குறிக்கும். தாயுமானவர் மற்றொரு பாடலில்,

“**அரமாய் என் வினைக் கருந்தாதைப் பொடி செய்ததே**”.
(27. பாயப்புலி,செ.2)

என, அரம் இரும்பைத் தேய்த்துப் பொடியாக்குவது போல,இறைவனின் தரிசனம் வினையைப் போக்கும் என்கின்றார்,

பாம்பன் சுவாமிகள்,

“**உலப்பில் உணர்வாம் அழல் உதிக்கின்**
**ஒழியும் ஆகாமியம் எல்லாம்**
**நிலைப்பாய் நின்ற சஞ்சிதமும்**
**அன்றே நீறும் பிராரத்தம்**
**பலக்காதே நின்று அறுதிபெறும்**”

– (3. பரிபூரணானந்த போதம், 1. பதி பசு பாச யதார்த்த விளக்கப்படலம், செ. 89).

என்று கூறுகின்றார். கேடில்லாத ஞானக்கினி உதிக்கின் ஆகாமியம் அனைத்தும் ஒழியும். நிலைபெறாக எஞ்சியுள்ள சஞ்சிதமும் அப்போதே சாம்பராகும். பிரார்த்தம்வலி குறைந்து உடலூலாய் அனுபவித்துக் கழியும் என்று கூறுகின்றார்.

பாம்பன் சுவாமிகள் வினைநீக்கம் பற்றிப் பல பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். இருளானது ஒளி முன்னே நில்லாது மறைந்து போகும். நெருப்பின் முன்னே வெண்ணெய் நிலைபெறாது உருகிவிடும். மெய்யின் முன்னே பொய் நிற்காது. அதுபோல “**திருவருள்முன்னே வினை நிற்காது**” என்கின்றார் (1.29 பொன்னவிர்மேனி, செ.3).

நன்கு வேதித்துச் சுத்தம் செய்யப்பட்ட நல்ல செம்பினைச் சேற்றின் நடுவில் வைத்து எடுத்தாலும் அதில் களிம்பு ஏறாது. அதுபோல ஆசையின் விதையை அவித்து, இறையருள் வியாபகத்தில் திளைத்தால், பிறகு செய்யப்படும் வினை ஆகாமியமாய்ச் சேராது (2. திருவலங்கல் திரட்டு, 2ஆம் கண்டம், 3. கலியியல், செ.77). வழிபாட்டின் போது ஓதப்படும் தூயசிவமந்திரமானது ஆகாமிய வினையை வறுக்கப்பட்ட விதையைப் போன்று பயன்தராது இருக்குமாறு நீக்கிவிடும். வலிமை மிக்க சஞ்சிதவினை பதிஞானத்தால் குன்றறிவிடும் (5. திருப்பா, 2 ஆம் புத்தகம், 61. மலைமகள், செ.19) ஆனால் “**உடல் உள்ளவும் பிராரத்தம் ஒழியாது**” (3. பரிபூரணானந்த போதம், 1. பதி பசு பாச யதார்த்த விளக்கப் படலம், செ.91). அது உடலால் அனுபவித்தே கழியும்.

## நால்வகை நெறிகள்

உயிர்கள் தம்மைக் கட்டியுள்ள பாசத்திலிருந்து நீங்கிப் பதியினைச் சென்றடைதலையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். அக்குறிக்கோளை அடைய உயிர்கள் கடைப்பிடிக்கும் வழிபாட்டு நெறிகள் சாதனம் எனப்படும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகும்.

"**விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்**
**அரும்பு, மலர், காய், கனி போல் அன்றோ பராபரமே**"
– (43. பராபரக்கண்ணி, 157)

என்று தாயுமானவர் கூறுவது அவை ஒன்றன் படிநிலை வளர்ச்சியே மற்றொன்று என்பதை உணர்த்தும்.

"**எனக்கு இனிச் சரியை ஆதிகள் போதும்**"

(10, எங்கும் நிறைகின்ற பொருள், செ.3) என்று தாயுமானவர் கூறுவதில் **சரியை ஆதி** என்பது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கினைக் குறிக்கும்.

பாம்பன் சுவாமிகள்,

"**சித்தாந்த சோபானம் நான்கில் செழும்சரியைக்கு**
**ஒத்தால் உலோகம் உறும் எனவும் தேர்ந்ததேனே**"
(1.71 தேர்ந்தேனே என் கண்ணி 25)

(சோபானம் – படிநிலைகள். உலோகம் உறும் – சாலோகம் என்னும் பதமுத்திகிட்டும் என்று கூறுகின்றார்.

"**கிரியை தனில் யோகி நின்றால் கேள் பூக்க வாழும்**
**இரிபு இல் சமீப உரு எய்தும் என்றும், தேர்ந்தேனே**"
- (மேலது, 26)

கிரியை நெறியிலும், யோக நெறியிலும் நின்றால் நட்புத் தோன்ற வாழும் அழிவில்லாத சாமீப பதவியும், சாரூப பதவியும் கிடைக்கும் எனத் தெளிந்தேன் என்கின்றார். மற்றொரு பாடலில் பாம்பன் சுவாமிகள்,

"**சோபானம் ஓர் நான்கில் தோகம் அற்ற வீறு ஆகும்**
**மாபோக சன்மார்க்க வாழ்வு ஈ பரம்சுரே**"
(67. பரஞ்சுடர்க்கண்ணி,58)

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு படிகளில் குற்றம் அற்ற பேரின்ப ஞான நேறி வாழ்க்கையை எனக்குத் தருவாயாக என்று பரம்பொருளை வேண்டுகின்றார்.

**குரு, லிங்க, சங்கம வழிபாடு :** குரு, லிங்க, சங்கம வழிபாடுகளும் இறைவனை அடைவதற்குரிய சாதன நெறிகளாகும். சங்கமம் என்பது அடியார்களின் கூட்டம். தாயுமானவர்,

"**குரு லிங்க சங்கமமாகக் கொண்ட திருமேனி அருள் மயம் என்று அன்புற்று அருள் பெறுவது எந்நாளோ;**"

(எந்நாட்கண்ணி, 15. நிலைபுரிந்தோர் கூடுதற்கு உபாயம்,16) என்று கூறுகின்றார். மற்றொரு பாடலில்,

"**குரு லிங்க சங்கமமாகக் கொண்ட திருமேனி**
**கரு ஒன்று மேனி நம்பால் காட்டாது - அருள் என்று**
**கண்டவர்க்கே ஆனந்தம் கண்டுகொள் ஆம் அலது**
**கொண்டவர்க்கு இங்கு என்ன கிடைக்கும்**"
- (28. உடல்பொய்யுறவு, செ.23).

என குருவும், லிங்கமும், சிவனடியார்களும் சிவ சொரூப மூர்த்திகளாகும். அருளைச் சார்ந்திருப் பவர்கட்கு இது விளங்குகிறது. அஞ்ஞானத்தில் பிறந்து உலகைச் சார்ந்திருப்பவர்கட்கு இது விளங்காது என்று தாயுமானவர் கூறுகின்றார்.

அவர் வழி நின்று பாம்பன் சுவாமிகளும்,

"**சிவகுருவையும் சிவனடியாரையும் வணங்குதல்**"
**அப்பரம் பொருள் வணக்கமாய் எண்ணப்படும்.**

(5. திருப்பா, முதல் புத்தகம், திட்பம் உரை, ப.48) என்று கூறுகின்றார். மேலும் குரு, லிங்கம், சிவனடியார் என்னும் மூவுருவங்களையும் நிட்கள பராபரமாக நினைத்து எக்காலமும் நல்ல நியமத்தோடு பூசித்துவரின் மனம் ஒடுங்கு நிலையை

அடையும் (3. பரிபூரணானந்த போதம், 2. துறவற விளக்கப் படலம், செ.96) என்று பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார்.

தாயுமானவர் 45 எந்நாட்கண்ணியில், 2. குருமரபின் வணக்கம், என்ற பகுதியில் 13 கண்ணிகளில் தட்சணாமூர்த்தி, சனற்குமாரன், மெய்கண்டார், அருணந்தி சிவாசாரியார், உமாபதி சிவம் முதலிய அருளாளர்களைச் சிவமாகக் கருதி வழிபட்டுப் போற்றுகின்றார்.

சிவபெருமானின் உண்மைத் தன்மையை உலகத்தார் நேரே அறிய முடியாது. இறைவன் மக்கள் தன்னை உணர்ந்து வழிபடுதல் பொருட்டுத் தன் வடிவமாகிய திருநீறு கண்டிகை முதலியவற்றைத் தன் அடியார்கட்குக் கொடுத்துள்ளார் (சிவஞானபோத உதாரண வெண்பா, 76). அடியார்கள் சிவவேடத்தால், சிவோகம் பாவனையால், அகபூசையில் குருவால் உணர்த்திய குறிவழி இதயத் தானத்து இறைவனை நிறுத்திப் பூசித்துப் புருவ நடுவில் தியானித்திருத்தலால் சிவமே ஆவர் என்கின்றார் அருணந்தி சிவாசாரியார் (சிவஞான சித்தியார் சு பக்கம், செ. 324). எனவே **அடியவர்களை அரனாகக் கருதி வழிபடுவதும் திருவருளைப் பெற்று உய்வதற்குரிய நெறியாகும்.**

தாயுமானவர் சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்தார், பத்திரகிரி, சிவ வக்கியர், அருணகிரிநாதர் முதலியவர்களைப் போற்றி வழிபட்டுள்ளார் (45, எந்நாட்கண்ணி, 3. அடியார் வணக்கம், கண்ணி 1-9).

பாம்பன் சுவாமிகள் தாம் அருளியுள்ள **அடியவர்க்கு அடிமை நாம்** (1.58) என்ற பதிகத்தில் பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ள அடியார்கள் பலரைப் போற்றி அவர்கட்குத் தான் அடிமை என்று கூறுவது சுவாமிகள் அடியவர்கள் பால் கொண்டுள்ள பக்தியை உணர்த்தும். பாம்பன் சுவாமிகள் உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம் என்ற நூலில் செய்யுட்கள் 61 முதல் 64 வரை அடியார் பெருமையை எடுத்துரைப்பது அவரது அடியார் பக்தியைக் காட்டும். சுவாமிகளால் போற்றப்படும் அடியவர்கள் அளவற்றவர்கள். “**அருளும் வளம் பொருந்திய தாயுமானவரின்**

**அருளைப் பெறுவது எந்நாளோ**” என்று சுவாமிகள் தாயுமானவரைப் போற்றுகின்றார் (மேலது, செ.64). தாயுமானவர் போன்ற அருளாளர்கள் பலர் தூய்மையுள்ள வேதாந்த சித்தாந்த சமரசத் தன்மையான அமுத நெறியாகச் சொன்ன உயர்ந்த வாக்குகள் என் சம்மதத்திலுள்ள முடிவுக்கு ஏற்ற முடிவேயாகும் என்று பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார் (1.8 திருவிராமேச்சுரம், செ.8).

**முக்தி**

முக்தி என்பது வீடுபேறு என்ற சொல்லாலும் குறிப்பிடப்படும். இச்சொல் விடுதல் பெறுதல் என்ற இரு சொற்களின் இணைப்பு ஆகும். விடுதல் என்பது பாசத்தை விடுதல். பெறுதல் என்றது சிவத்தை அழுந்திப் பேரின்பத்தை அனுபவித்தல். ஆன்மா ஆணவத்தோடு அழுந்தி நிற்கும் நிலை பெத்தம். அது பதியில் அத்துவிதமாய்க் கலந்து சிவனது இன்பத்தில் திளைக்கும் நிலை முக்தி. ஆன்மா பெத்தத்தில் ஆணவ மலத்தோடு எவ்வாறு தான் என வேறு தோன்றாது அதில் அழுந்தி நின்றது போல, முக்தியில் சிவத்தோடு தான் என வேறுபாடு தோன்றாது அதனில் அழுந்தி நிற்கும், இதனைத் தாயுமானவர்,

“**ஆணவத்தோடு அத்துவிதமானபடி மெய்ஞ் ஞானத்**
**தானுவினோடு அத்துவிதம் சாரும் நாள் எந்நாளோ**”

–(45. எந்நாள் கண்ணி, 14 நிற்கும் நிலை,28) என்கின்றார்.

ஞானத்தால் முக்தி என்பர். ஞானம் திருவருளால் கொடுக்கப்படும். அருளாளர்கள் பலரும் இறைவனிடம் முக்தி தரும் ஞானத்தை, அவனருளேயே வேண்டுவர். ஆசைக்கு அடிமைப்பட்டுள்ள உலகத்தவர்களின் போக்கு அஷ்டசித்திகளை நாடுதல். மேலோர் (ஞானிகள்) போக்கு முக்தியை நாடுதல் தாயுமானவர்

“**சித்தி – அற நெறி கேட்டல் ஜெகமயக்கம் ஜன்மம்**
**முக்தி – நெறி கேட்டல் முறைகாண் பராபரமே**”

- (43.பராபரக்கண்ணி 267) என்கின்றார்.

பிறவியைக் கடலாக உருவகிப்பர். அதில் உள்ள இடைஞ்சல்களை விளக்கி,

“**எளியேன் செப்பரிய முக்திகரை சேர கருணை செய்வையோ**”
- (12. தேஜோ மயானந்தம், செ.2)
என தாயுமானவர் பரம்பொருளை வேண்டுகின்றார்.

பாம்பன் சுவாமிகள் பல பாடல்களில் இறைவனிடம் முக்தி தர வேண்டிப் பிரார்த்திக்கின்றார். சுவாமிகள் முக்தி நிலையானது ஒன்று எனவோ இரண்டு எனவோ கூறஇயலாது என்பார். தாயுமானவர்,

“**ஒன்று இரண்டு என்று உன்னா உணர்வு கொடுத்து**
**உள்ளபடி என்றும் என்னை வையாய் பராபரமே**”
(43.பராபரக்கண்ணி 290) என்கின்றார்.

மருமலர்ச் சோலை என்று தொடங்கும் பாடலில்

“**ஒன்றோடு இரண்டு எனாச் சமரச சொரூப சுகம்**
**உற்றிட என் மனத்தின் வண்ணம்**
**திருவருள் முடிக்க இத்தேக மோடு காண்பேனோ**”
- (12. தேஜோ மயானந்தம், செ.1)

என்று தாயுமானவர் கூறுகின்றார். மேலும்,

“**உன்னாமல் ஒன்று இரண்டு என்று ஓராமல் வீட்டுநெறி**
**சொன்னான் வரவும் வகை சொல்லாய் நீ பைங்கிளியே**”

(44. பைங்கிளிக் கண்ணி, 7) என்று கிளியிடம் தாயுமானவர் கூறுகின்றார். பாமபன் சுவாமிகள் கருணைத் தேவு என்ற பதிகத்தில் ஒரு பாடலில் முற்கூறிய தாயுமானவரின் பாடல்களின் தொடக்கத்தை மேற்கோளாகச் சுட்டுகின்றார். முக்தி நிலையானது ஒன்று எனவோ இரண்டு எனவோ கூறமுடியாத வகையில் சமரசப்பட்டிருப்பது என்ற பொருளில் “**மருமலர்**” எனத் தொடங்கும். பாட்டிலும் “**ஒன்று இரண்டு**” எனத் தொடங்கும். பாட்டிலும், “**உன்னாமல்**” எனத் தொடங்கும் பாட்டிலும் “**ஒன்றிரண்டு**” என்று தொடங்கும் பாட்டிலும் “**போனகம்**” என்று தொடங்கும் பாட்டிலும் தாயுமானவர் நன்கு கூறியுள்ளார் என்கின்றார். (5. திருப்பா, இரண்டாவது புத்தகம் 57. கருணைத்தேவு, செ. 8).

"**போனகம்**" என்று தொடங்கம் பாடலில் "**இரண்டு ஒன்று என்னும் ஓர் மானத விகற்பம் அற நிற்பது நமது மரபு**" என்று தாயுமானவர் கூறுகின்றார் (5. மௌன குரு வணக்கம் செ.5) (சுவாமிகள் சுட்டும் தாயுமானவர் தொடக்கச் செய்யுள் உள்ள மற்ற பாடல்கள் அனைத்தும் முன்னர்க் கூறப்பட்டுள்ளன.)

**முக்தி இன்பம்**

முக்தி இன்பம் இப்படிப்பட்டது என்பது வாயினால் சொல்வதற்கு அரிது ஆயினும் அவ்வின்பத்தை உணர்த்த இன்பம் தரும் பொருட்களை உவமையாகத் தாயுமானவர் கூறுகின்றார்.

"**கன்னல் முக்கனி கண்டு தேன்**
**சர்க்கரை கலந்தது**
**என்ன முக்தியில் கலந்தவர்க்கு**
**இன்பமாய் இருக்கும்**"
- (25. எனக்கு எனச் செயல், செ.9).

"**கன்னலுடன் முக்கனியும் கற்கண்டும் ஜீனியுமாய்**
**மன்னும் இன்ப ஆரமுதை வாய்மடுப்பது எந்நாளோ**"
- (45. எந்நாட்கண்ணி, 10. ஆனந்த இயல்பு,
கண்ணி 10) என்கின்றார். தாயுமானவர்,

பாம்பன் சுவாமிகள்,

"**கரும்பினைத் தேனைக் கண்டினை இழுதைக்**
**கனியினை அமிழ்தினைப் பழித்த அரும்பரை போகம்**"

(3. பரிபூரணானந்த போதம், துறவறவிளக்கப்படலம், செ.33) என்கின்றார்.

(கண்டு–கற்கண்டு, இழுதை–நெய்) சுவாமிகள் மற்றொரு பாடலில் இறைவனின் திருவடியில் தோயும் இன்பமானது இனிய அமுதமாகவும், கற்கண்டாகவும், சருக்கரையாகவும், தேனாகவும், மா, பலா, வாழை என்னும் மும்பழச்சுவையாகவும் தித்திப்பதாகக் கூறுகின்றார் (4. குமரவேல் பதிற்றுப் பந்தாதி, செ. 7)

தாயுமானவர்,

> "**கொலை களவுகள் காமம் கோபம் விட்டால் அன்றோ**
> **மலை இலக்கா நின் அருள்தான் வாய்க்கும் பராபரனே**"
> - (43. பராபரக்கண்ணி, 288)

பிற உயிரைக் கொல்லுதல், பிறர் பொருளைக் களவு செய்தல், கள்ளுண்டல், நெறி நீங்கிய காமத்து அழுந்துதல், கோபம் இவற்றை நீக்காத வரை, இறைவனின் அருள் கிட்டாது என்கின்றார்.

இவர் வழி நின்று பாம்பன் சுவாமிகளும்,

> "**நிகழ் பொய் கொலை காமம் நறை களவு என்**
> **பன வென்றறி பொய் பகரில் பல நாள்**
> **பணிவந்துள்ள மாதவமும் தொலையும்**
> **இனன் மைந்தனின் வெஞ்சினமுங் குவ வாய்**
> **எழும் இவ்வுலகும் பழி கூறுமனே**"

(3. தகராலய ரகசியம், இரண்டாம் காண்டம்,செ.32) என்கின்றார்

இப்பாடலில் நறை – "கள்ளையும்," "இனன் மைந்தன்" என்பது யமனையும் குறிக்கும். சம்ஹா என்னும் சூரியனுக்கும், அவன் மனைவி சஞ்+pகை என்பாளுக்கும் பிறந்தவன் யமன் ஆதலின் அவன் இனன் மைந்தன் எனப்பட்டான். முற்கூறிய குற்றங்கள் செய்தார்க்கு எல்லாத் தவங்களும் அழியும். நரகமே கிட்டும் என்கின்றார்.

**கொல்லாமை :**

> "**கண்ணலுடன் முக்கனியும் கற்கண்டும் ஜீனியுமாய்**
> **மன்னம் இன்ப ஆரமுதை வாய்மடுப்பது எந்நாளோ**"

கொலை என்பது உயிரை உடம்பினின்றும் பிரிப்பது. உயிருக்கு உடல் ஆண்டவனால் கொடுக்கப்படுகிறது. உயிர் உடலுள் வாழ்ந்து மெய்யுணர்வு பெற்று இறைவனை அழுந்தி அனுபவித்துப் பேரின்பம் நுகர்தற்கு உரியது. இது கப்பலிலிருந்து கரை சேர்வது

போன்றது. கப்பலை நடுக்கடலில் உடைத்து விட்டால் எவ்வளவு பாவமோ, அவ்வளவு பாவம் உயிரை உடலிலிருந்து பிரித்து விடுவது. கொலையினால் உண்டாகும் கேட்டினை உணர்வோர் கொல்லாமை என்னும் பண்பைப் பின்பற்றவேண்டும். தன்னுடைய உயிருக்கே ஆபத்து என்று தெரிந்தாலும் அதைத் தடுப்பதற்காகப் பிற உயிர்களைக் கொல்லும் கொடிய செயலைச் செய்யக் கூடாது என்று வள்ளுவர் கூறுகின்றார் (குறள் 327)

"**கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க**
**எல்லோருக்கும் சொல்வது என் இச்சை பராபரமே**"
(43. பராபரக்கண்ணி, 54) என்றும்,

"**கொல்லா விரதம் ஒன்று கொண்டவரே நல்லோர் மற்று**
**அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே**"
(மேலது, 192) என்கின்றார் தாயுமானவர்.

கொல்லாமை எனும் அறத்தை ஒருவன் பின்பற்றினால் அது அவனிடமுள்ள பிற குணக்கேட்டையை நீக்கிவிடும்.

"**வயங்கு அருளுள்ளார் இயங்கு உயிர் கொல்லார்**" (ஞான வாக்கியம், 27) அருள் உள்ளம் கொண்டவர் தம் போன்று நடமாடும் பிற உயிர்களைக் கொல்லார் எனப் பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார்.

**ஈதலறம் :**

நல்லோர்கள் தானம் தவம் தருமம் எப்போதும் கேளாமலே செய்வர் என,

"**தானம் தவம் தருமம் சந்தமும் செய்வர் சிவ**
**ஞானந்தனை அணைய நல்லோர் பராபரமே**"
- (43. பராபரக்கண்ணி 158) என்கின்றார்.

தாயுமானவர்

"**தேடும் திரவியமும் சேர்ந்த மணிப் பெட்டகமும்**
**கூட வரும் துணையோ கூறாய் பராபரமே**"

– மேலது 233)

ஒருவன் இறக்கும் போது அவன் சேமித்து வைத்துள்ள செல்வம் அவனுடன் போகாது. அவன் செய்த தருமம் தான் அவனுக்குத் துணை. மனிதர்களுள் சிலர் முதுமையில் அறம் செய்யலாம் என காலத்தைக் கடத்துவர். முதுமையில் கோழை மிகுதியாகி, கைகால் இழுத்து, அறிவிழந்து படுக்கையில் கிடந்து அல்லல் உறும்போது அறம் செய்வது எப்படி? அது இயலாதது. இளமையிலேயே அறம் செய்தல் வேண்டும் என்பதை உணர்த்தவே, யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை பற்றி அருளாளர்கள் எடுத்துரைக்கின்றனர்.

மக்கள் தன் முனைப்போடு தான தருமம் செய்யக்கூடாது. **இறைவனை நினைந்து, அருள்வழியில் நின்று தான தருமம் செய்யவேண்டும்.** பாம்பன் சுவாமிகள்,

"**தானம் தவங்கள் எல்லாம் நினைச் சீத்து**
**எவர்தாம் செய்யினும்**
**ஊனம் தரும் அலான் மானந்தரா**"

(4-கந்த கோட்ட மும்மணிக் கோவை, செ.9) என்கின்றார்

(ஊனம் -அழிவு. மானம்-பெருமை) கந்த கோட்டத்துள் விளங்கும் முருகப்பொருமானை விலக்கித் தானம், தவம் என்பவற்றை எவர் செய்யினும் அழிவைத் தருமே தவிர அன்றிப் பெருமையைத் தரா என்று சுவாமிகள் கூறுகின்றார்.

பாம்பன் சுவாமிகள்,

"**காய கற்ப வாழ்வும் ஒரு காலம் அழிவாம் எனில் கீழ்**
**ஆய புலை யாக்கை நிலையாமோ சதாசிவமே**"

(1.70 சதாசிவக்கண்ணி 13)

என்று யாக்கை நிலையாமை பற்றிக் கூறுவது உடல் உள்ளபோதே இளமையிலேயே அறம் செய்ய வேண்டும் என்பதை உணர்த்தும்.

"**தேய நனி துவள நுதல் நீர் அரும்பப் பணம்**
**தேடி வெகு பாடுபட்டுச்**

**செத்த பிறகு உறுமஞர்க்கு ஒரு சிறிதும் உதவாத**
**தேவி மக உறவுகள் மேல்**
**தயாவளி மிக்கு வைத்திட்டு நினைவிட்டு மா**
**தாபத்திலே உழன்று**
**தனுவினுள் பிணியுற்று விரிபாயல் ஒட்டிவன்**
**தரு மனதி காரத்தினால்**
**ஆய இவ்வுலகைத் தணந்தபின் நிரயத்தில்**
**ஆழ்வோர் அறிவிலிகள்**"

– (1.20 பூரணானந்த குகன் செ.4)

என்று ஒருவன் பாடுபட்டுச் சேர்த்த பணம் அவனின் இறுதிக்காலத்தில் உதவா. தன் மக்கள் பாலுள்ள அன்பால் சேமித்து ஆசையிலே உழன்று முதுமையில் நோயுற்றுப் பாயில் கிடந்து உலகை நீத்தபின் நரகத்தில் ஆழ்ந்து துன்புறுவர் என்று பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார்.

"**பொன் ஈட்டினோரை விட்டுப் போனாலும் போம் அவர்**
**அப் பொன்னை விட்டுப் போனாலும் போவார்**
**சதாசிவமே**"

(1.70 சதாசிவக்கண்ணி 12)

என்றது செல்வத்தின் நிலையாமையையும், யாக்கையின் நிலையாமையும் உணர்ந்து இளமையிலேயே அறம் செய்ய வேண்டும் என்பதை உணர்த்தும்.

### ஆசையை நீக்குதல்

அதிக ஆசையைப் பேயாகவும், கடலாகவும், மலையாகவும், வலையாகவும் பெருங்காற்றாகவும் உருவகிக்கின்றனர். பேய் ஒருவனை அலைக்கழிக்கும். அதுபோல எத்தனை வந்தாலும் போதாது என்று எண்ண வைத்து மனிதனைப் ;பேயாய் அலைய வைத்து ஆட்டி வைப்பது ஆசை.

கடல் பரந்தது, ஆழம் உடையது மனிதனின் ஆசையும் பல பொருட்களில் பரந்து விரியும். ஆழமான கடலில் அமிழ்ந்தவன் கரையேறுவது கடினம். அதுபோல ஆசைக் கடலுள் அமிழ்ந்தவன்

கரையேறல் அரிது. கரையேற்ற உதவுபவன் கடவுளைத் தவிர யாரும் இல்லை.

**“ஆசைச் சுழற்கடலில் ஆழாமல் ஐயா நின்**
**நேசப் புணைத்தாள் நிறுத்தினால் ஆகாதோ”**

- (47. ஆகாதோ என் கண்ணி, 12)

என்று தாயுமானவர் கூறுகின்றார். மலை மிக உயராமானது. அளக்கலா அளவுடையது. மனிதனின் ஆசையும் அளவிறந்து செல்வதால் அதனை மலையாகப் பாம்பன் சுவாமிகள் உருவகிக்கின்றார்.

**“ஆசை மலை போல, இங்கே ஆனாலும் போங்காலம்**
**காசும் வராதே என் கண்ணே சதாசிவமே”**

- (1.70 சதாசிவக்கண்ணி 11)

என்கின்றார் பாம்பன் சுவாமிகள்.

காட்டிலே பறவைகளையோ, விலங்கு களையோ பிடிக்க நினைப்பவர் தானியங்களைத் தூவிமேலே வலைவிரித்து வைப்பர். தானியம் தின்ன ஆசைப்பட்டுப் பறவைகள், விலங்குகள் வந்து அவ்வலையில் அகப்பட்டுக் கொள்ளும். மீன் பிடிப்பவர்கள் தூண்டிலில் இரையை வைத்து நீர்நிலையில் விட, இரை தின்ன ஆசைப்பட்டு வரும் மீன்கள் தூண்டிலில் சிக்கிக் கொள்ளும். இதுபோல அறியாமை பூண்டு உலக ஆசையிலோ போவேன் குருபரனே? என

**“தூண்டில் இரைக்கு ஆசை கொண்டு துஞ்சும் மச்சம்**
**போல் மடமை**
**பூண்டு உலக இச்சையிலோ போவேன் குருபரனே”**

(69 குருபரக்கண்ணி, 39) என்கின்றார் பாம்பன் சுவாமிகள். மடவர்கள் தான் அவ்வாறு போவர். யான் உலக ஆசையிலோ போவேன் ? போக மாட்டேன் என்பது குறிப்பு

**“ஆசை வலையில் கிடந்தே அல்லல் அறுவார் அசடர்**
**தாசன் கிடக்கத் தகுமோ பரஞ்சுடரே”**

(1.67 பரஞ்சுடர்க்கண்ணி . 48)

மூடர்கள் தான் ஆசைவலையில் கிடந்து துன்புறுவர். உன் அடிமையான யான் அவர்போல கிடக்கத் தகுமோ என பாம்பன் சுவாமிகள் பரஞ்சுடரை வினவுகின்றார்.

தாயுமானவர் ஆசையை ஒரு பெரும் காற்றிற்கு ஒப்பிடுகின்றார். ஆசை என்னும் பெருங்காற்றிலே இலவம் பஞ்சு அலைவது போல மனமானது அலையும்போது துன்பம் வரும். அதனால் கல்வி கேள்விகள் வீணாகிவிடும். முக்தி பெறுவதற்குரிய நற்குணங்களும் அவனை விட்டு நீங்கி விடும். ஐம்புலன்களும் கொடுமையால் ஆசை வலையில் கட்டுண்டு நிற்பர். ஆசைகளை அழிக்கா விடில் அவர்களால் இறைவனை அடைய முடியாது என,

"**ஆசை எனும் பெருங்காற்றூடில் இலவம் பஞ்சு**
**எனவும் மனது அலையும் காலம்**
**மோசம் வரும் இதனால் கற்றதும் கேட்டதும்**
**தூர்ந்து முக்திக்கு ஆன**
**நேசமும் நல்வாசமும் போய்ப் புலனாயில்**
**கொடுமை பற்றி நிற்பர் அந்தோ**
**தேசு பழுத்த அருள் பழுத்த பராபரமே**
**நிராசை இன்றேல் தெய்வம் உண்டோ?**"

(24. ஆசை எனும். செ.1) என்று தாயுமானவர் கூறுகின்றார்.

தாயுமானவரைப் போல பாம்பன் சுவாமிகளும் ஆசையைப் பெருங்காற்றாக உருவகிக்கின்றார்.

"**ஆசை மனச் சுழிக்காலாலே சுழலுகின்ற**
**தூசாகினேனே சுவாமி பரஞ்சுடரே**"

(1.67 பரஞ்சுடர்க்கண்ணி, 119)

மனிதனின் ஆசைக்கு ஓர் அளவு இல்லை, உலகங்கள் எல்லாவற்றையும் கட்டி அரசு செலுத்தினாலும், கடலின் மீதும் தன் ஆணை செல்லும்படி விரும்புவான். குபேரனுக்கு நிகராகப் பொன்னைக் குவியல் குவியலாக உடையோரும் மேலும் பொன் பெறுவதற்கு இரசவாதத்தினைச் செய்ய முயல்வர். இவ்வுலக இன்பத்தை நெடுநாள் அனுபவித்த கிழவர்களும் மேலும் உடலைக் காத்தற்குக் காயகற்பம் தேடி வருந்துவர். (காயகற்பம் என்பது

உடலை மூப்பு, இறப்புக்களினின்றும் நீக்கும் ஓர் அரிய மருந்து. அறவே நீக்காது. மூப்பையும் இறப்பையும் சற்றுத் தள்ளிப்போடும்) இவ்வுலகில் நீண்ட நாள் இருந்து உண்பதற்கும், உறங்குவதற்கும் ஆசைப் படுவது வீண் செயல். உள்ளதே போதும் என நினைத்து, ஆசைக்கடலில் அமிழாமல் மனத்தை அடக்கிப் பரிசுத்த நிலையை அடைய பரம்பொருள் அருள் செய்ய தாயுமானவர் வேண்டுகின்றார்.

– (2. பரிபூரணானந்தம் செ.10)

பாம்பன் சுவாமிகளும் மனிதர்களிடமுள்ள பலவகை ஆசைகளை முதல் மண்டிலம் 69. குருபரக்கண்ணியில் குறிப்பிடுகின்றார்.

ஆசை பெருகப் பெருக அளவில்லாத துன்பமே உண்டாகும். ஆசையை விட விட ஆனந்தம் உண்டாகும்.

**மூவாசையை வெறுத்தல்**

மூவாசையாவது மண்ணாசை, பொன்னாசை, மண் ஆசை ஆகும். தாயுமானவர்,

"**பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்**"
- (18. பொன்னை மாதரை, செ.1)

என்று கூறுவது அவர் மூவாசையை வெறுத்தவர் என்பதை உணர்த்தும்.

தாயுமானவரைப் பின்பற்றிப் பாம்பன் சுவாமிகளும்,

"**பொன்னாசை பெண்ணாசை பூவாசை நாடேல் நீ**
**என்னாசை நாதற்கு இயம்பிடாய் பொன்மயிலே**"

– (1.68 பொன்மயிற்கண்ணி 35)

என்ற சுவாமிகள் தான் மூவாசைகளையும் இனி நாடமாட்டேன் என்பதை நீ என் ஆசைத் தலைவனான முருகப் பெருமானிடம் சொல் என்று பொன் மயிலைத் தூதனுப்புகின்றார்.

இந்த மூவாசைகளாகிய உலகமாயையில் சிக்குண்டு கலங்குவதை ஆறுமுகப் பெருமானின் அருளின் வலிமையினால்

வெல்வோர் மேனிலை அடைவர் என அறிவுறுத்துகின்றார்.

"**ஆறு நின்னடி அன்றி மண்ணாசை பொன்னாசை**
**நீளு மென்குழல் மங்கையர் ஆசை நீங்காக்**
**கோளுளோர்களும் ஞானிகளோ புகழ்: குயின்றோன்**
**நாளு நாடிய தெய்வம் உள்கு எனை வளை நபமே**"

- (1.61 பணம் செ.10)

என பாம்பன் சுவாமிகள் மூவாசைகளையும் நீத்தோர் ஞானிகள் ஆகார். அவை நீங்க முருகப் பெருமானை நினைத்து தியானிக்க வேண்டும் என்கின்றார்.

**பொறாமை நீக்கல்**

"**அழுக்காற்றால் நெஞ்சம் அழுங்கிய புன்மாக்கள்**
**இழுக்காற்றால் இன்ப நலம் எய்தார் பராபரமே**"

– (43. பராபரக்கண்ணி 297)

என்கின்றார் தாயுமானவர், ஒருவர் இன்ப நலம் எய்த விரும்பினால் பொறாமையை விட வேண்டும். (அழுக்காறு – பொறாமை)

மனிதனைப் பிணித்துள்ள உட்பகை ஆறினுள் மாச்சரியம் எனப்படும். பொறாமையும் ஒன்று ஆகும். ஒருவன் நீக்க வேண்டிய சித்த விருத்திகளுள் 14னுள் இதனையும் ஒன்றாகச் சுவாமிகள் குறிப்பிடுகின்றார் (சிவஞான தீபம்).

மிகுதியாகக் கற்றவர்களிடத்தும் இப்பொறாமை என்னும் தீக்குணம் உள்ளதைப் பாம்பன் சுவாமிகள்,

"**எத்தனை படித்தாலும் வஞ்சனை பொறாமை தாம்**
**என்னை விட்டு அகலவில்லையே**"

(1.4. திருப்பழநிமலை. செ.3)

என்பதால் சுட்டிக் காட்டுகின்றார். மக்களிடமுள்ள குறையைச் சுவாமிகள் தம்மேல் ஏற்றிக் கூறுகின்றார்.

## மனத்திற்கு கூறும் உவமைகள்

தாயுமானவரும், பாம்பன் சுவாமிகளும் மனத்திற்குக் குரங்கையும், கறங்கையையும் (காற்றாழி), திரிகைக்கும் ஒப்பிட்டுக் கூறுகின்றனர்.

**குரங்குக்கு ஒப்பிடுதல்**

**"பொறியில் செறி ஐம்புலக் கனியைப்**
**புத்திக் கவரால் புகுந்து இழுத்து**
**மறுகிச் சுழலும் மனக்குரங்கு**
**மாளா வாளா இருப்பேனோ"**

– (ஆசை எனும் செ.10)

என்கின்றார் தாயுமானவர்.

குரங்கு ஒரு கொம்பிலிருந்து மற்றொன்றுக்குத் தாவும். அதுபோல மனமானது ஒன்றினை நினைந்து பற்றி, பின் விட்டு மற்றொன்றைப்பற்றக் கருதும்.

**"கொள்ளித் தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க் குரங்காய்க்**
**கள்ள மனம் துள்ளுதென் கண்டாய் பராபரமே"**

– (43. பராரக்கண்ணி, 172)

என்றும்,

**"குணமிலா மனம் எனும் பேய்க் குரங்கின் பின்னே**
**மாறாத கவலையுடன் சுழலை என்னை வைத்தனையே"**

என்றும் மனத்தைப் பேய்க்குரங்கு என்கின்றார். இயல்பாகவே ஆடுகின்ற பேய்க் குரங்கினைக் கொடுமையான விஷம் நிறைந்த தேளும் கொட்டி விட்டால் அது என்னவாய்த் துள்ளும். அது போல் என் கள்ள மனமும் துள்ளுகின்றது என்று தாயுமானவர் வருந்துகின்றார்.

பாம்பன் சுவாமிகள் "ஒரு கொம்பிலிருந்து மற்றொரு கொம்பிற்குத் தாவும் குரங்கு போல, மனமானது ஒன்றினை நினைந்து பற்றி, பின் விட்டு மற்றொன்றினைப் பற்றக் கருதும். அது

ஓய சிலர் இறையருளோடு புணராது, தம்மையே முதலாகக் கருதி கருவி கரணங்களை அடக்கும் அமலயோகம் புரிந்து மருள் கொண்டு சுழல்வர். அத்தகைய வீண் மார்க்கம் எனக்கு வேண்டாம் மனம் அடங்க சிவராஜயோகம் புரிய அருள்செய் எனக் குகனை வேண்டுகின்றார்" (1.11 திருக்குமர கோட்டம். செ.4)

**மனத்தைக் காற்றாடிக்கும், திரிகைக்கும் ஒப்பிடல்**

**"ஆடும் கறங்கும் திரிகையும்**
**போல அலைந்து அலைந்து**
**காடும் கரையும் திரிவது அல்**
**லால் நின் கருணை வந்து**
**கூடும் படிக்குத் தவம் முய**
**லாத கொடியர் எமன்**
**தேடும் பொழுது என்ன செய்வார்**
**பரானந்த சிற்சுடரே"**

– (27. பாயப்புலி, செ. 56)

என்கின்றார் தாயுமானவர், காற்றில் பறக்கும் பட்டம் மேலும் கீழும் அலையும். அது போல என் மனம் அலமந்து உழல்கின்றது. குயவனின் வண்டிச் சக்கரம் வனையும் தொழில் முடிந்தபின்பும் சிறிது நேரம் சுழலும். அதுபோல மனமும் ஒரு செயல் நடந்து முடிந்த பின்பும் அதைப் பற்றிச் சிறிது நேரம் சிந்தித்து உழலும்.

**"ஆடு கறங்காகி அலமந்து உழன்று மனம்,**
**வாடுமென ஐயா நீ வா எனவும் காண்பேனோ"**

(46 காண்பேனோ என் கண்ணி 22)

**"வாலற்ற பட்டம் என மாயா மனப்படலம்,**
**காலற்று வீழவும் முக் கண்ணுடையாய் காண்பேனோ "**

(மேலது, 7)

என்கின்றார் தாயுமானவர், வாலற்ற காற்றாடி கீழே விழுந்து சும்மா கிடப்பது போல் என் மனமும் உன் அருளால் வலுவற்றுச் சும்மா இராதா எனத் தாயுமானவர் புலம்புகின்றார்.

**பாம்பன் சுவாமிகளும்**

> **"ஓடியுழல் சிந்தனையால் ஓயாமலே**
> **கறங்கி ஆடும் கறங்கு என இங்கானேன் பரஞ்சுடரே"**
> (1.67. பாஞ்சுடர்க்கண்ணி, 120)

என்று மனத்தின் இயல்பைக் காற்றாடிக்கு ஒப்பிடுகின்றார்.

**மனத்தை அடக்குவது அரிது**

மனத்தை அடக்குவது அரிது என்பதை,

> **"கந்து உக மதக்கரியை வசமா நடத்தலாம்**
> **கரடி வெம்புலி வாயையும்**
> **கட்டலாம் ஒரு சிங்கம் முதுகின் மேல் கொள்ளலாம்**
> **கண்செவி எடுத்து ஆட்டலாம்**
> **வெந்தழலின் இரதம் வைத்து ஐந்து லோகத்தையும்**
> **வேதித்து விற்று உண்ணலாம்**
> **வேறு ஒருவர் காணாமல் உலகத்து உலாவலாம்**
> **விண்ணவரை ஏவல் கொள்ளலாம்**
> **சந்நதமும் இளமையோடு இருக்கலாம் மற்று ஒரு**
> **சரீரத்திலும் புகுதலாம்**
> **ஜலம் மேல் நடக்கலாம் கனல் மேல் இருக்கலாம்**
> **தன் நிகர் இல் சித்தி பெறலாம்**
> **சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற**
> **திறம் அரிது சத்து ஆகி என்**
> **சித்தமிசை குடிகொண்ட அறிவு ஆன தெய்வமே**
> **தேஜோ மயஸனந்தமே"**

– (12. தேஜோமயானந்தம், செ.8) என்கின்றார் தாயுமானவர்.

எவ்வளவோ பேறுகளையும் பெறலாம் சித்தி களையும் பெறலாம். ஆனால் மனத்தை அடக்காதவர்க்கு வெறும் வாய்ப்பேச்சால் பயன் இல்லை

> **"சினம் இறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்**
> **மனமிறக்கக் கல்லார்க்கு வாய் ஏன் பராபரமே"**

– (43. பராபரக்கண்ணி 169) என்கின்றார் தாயுமானவர்,

பாம்பன் சுவாமிகள் மனத்தை ஒடுக்கி அருளில் நிற்க இயலாத மக்களை,

“**தனியே இருந்து கண்மூடி ஐம்புல வழித்**
**தடம் அடைத்து உள் இயங்கும்**
**சதுர்வித மனாதி கரணங்களை ஒடுக்கி**
**சமநிலையினின்று உன் அருளில்**
**கனிவுற்றிராத புன்மதியன்**”

– (1.13. திருமலை, செ.6) என்கின்றார்

**மன அடக்கம் தர இறைவனை வேண்டுதல்**

மனம் புறவிடயங்களில் விரிந்தால் பிறவி விடாது தொடரும். மனம் இறைவனிடம் குவிந்தால் பிறவி தொடராது. அவ்வாறு மனத்தைக் குவியச் செய்வதும் இறைவனே.

“**பாழான என் மனம் குவிய ஒரு தந்திரம்,**
**பண்ணுவது உனக்கு அருமையோ**”

– (2. பரிபூரணானந்தம் செ,9)

என்கின்றார் தாயுமானவர்.

பாம்பன் சுவாமிகளும்,

“**நாட்ட மனம் குவிய நானறியேன் பூட்டைதனில்**
**ஆட்டிடும் கொட்டையென ஆனேன் பரஞ்சுடரே**”

(1.67. பரஞ்சுடர்க்கண்ணி, 121) என்கின்றார்.

மனம் அடங்க நிட்டை புரிதல் வேண்டும். அதனை அறியாத மக்கள் இயல்பைச் சுவாமிகள் தம் மேல் ஏற்றி,

“**பொய் வாழ்வு வையகம் பொய் என்று அடங்க என்**
**புரை மனது அடங்கி நிட்டை**
**புரிய ஒரு காலத்து நனி கண்டிலேன்**”

(1.19 குகப்பிரமம் செ.10) என்கின்றார்.

## மனித நேயம்

**“எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே**
**அல்லாமல் வேறு ஒன்று அறியேன் பராபரமே”**
- (43. பராபரக்கண்ணி, 221) என்றும்,

**“எவ்வுயிரும் என் உயிர் போல் எண்ணி இரங்கவும் நின்**
**தெய்வ அருள் கருணை செய்யாய் பராபரமே”**
- (43. பராபரக்கண்ணி 65) என்றும் தாயுமானவர் கூறுவது அவரது மனித நேயத்தை உணர்த்தும்.

பாம்பன் சுவாமிகள், திருவருள் அன்பு எந்த ஒன்றைக் காட்டிலும் பெரியதாகும். எல்லா மக்கட்கும் உன் நல்லருளை வழங்குவாயாக என்று முருகப்பெருமானை வேண்டுவது (5,திருப்பா, இராண்டாம் புத்தகம், 15. பெரிய சாமி செ.6) அவரது மனித நேயத்தைக் காட்டும் . பாம்பன் சுவாமிகள் தம் சிவஞான தீபம் என்ற நூலில் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய கட்டளைகள் 15 கூறியுள்ளார்கள். அதில் **எல்லா மனிதரிடமும் அன்பாகப் பேச வேண்டும். எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகப் பாவிக்க வேண்டும்** என்று கூறுவது மனித நேயத்தை உணர்த்தும். தாயுமானவரும், பாம்பன் சுவாமிகளும் மக்கட்கு உணர்த்தும். ஒழுக்க நெறிகளும், பல அறவுரைகளும் இருவர்களின் மனித நேயத்தை உணர்த்தும்.

## இறை இன்பம் பெற அருளை வேண்டல்

“பக்திச் சுவை மிகுந்த தெய்வ நலம் கனிந்த பாடல்களையும் படித்துத் தெளியவில்லை. மூவர் தேவாரத்தையும் பண்ணோடு பாடும் இசையறிவும் இல்லை. யோக நெறியில் நிற்பதற்கும் இந்த உடல் இடம் கொடுக்கவில்லை. உணவை வெறுப்பது உயிரை வெறுப்பது போல் உள்ளது. சரியை, கிரியை முதலான நெறிகளைச் செய்ய முடியாமல் மோகம் தடுக்கிறது. மோனநிலை நிற்பதற்கும் தடைகள் பல உள. எல்லாப் பொருட்களிலும் நிறைந்துள்ள இறைவனே, நான் உன்னை எப்படி அடைவேன் என தாயுமானவர் இறையருளுக்கு ஏங்குகிறார். (11. சச்சிதானந்த சிவம், செ.3)

இப்பாடலில் தாயுமானவர் இறைவழியில் நில்லாத மக்களின் இயல்பைத் தன்மேல் ஏற்றிக் கூறுகின்றார்.

**"அப்ப என் எய்ப்பில் வைப்பே ஆற்றுகிலேன் போற்றி என்று**
**செப்புவது அல்லால் வேறு என் செய்வேன் பராபரமே"**

(43. பராபரக்கண்ணி 25)

**"உன்னை நினைந்து உன் நிறைவின் உள்ளே**
**உலாவும் என்னை**
**அன்னை வயிற்று இன்னம் அடைக்காதே பராபரமே"**
(மேலது, 62)

**"காட்ட அருள் இருக்கக் காணாது இருள் மலத்து**
**நாட்டம் எனக்கு வரல் நன்றோ பராபரமே"**
(மேலது, 79)

**"எத்தன்மைக் குற்றம் இயற்றிடினும் தாய் பொறுக்கும்**
**அத்தன்மை நின் அருளும் அன்றோ பராபரமே"**
(மேலது, 80)

**"தன்னை அறிந்து அருளே தாரகமாய் நிற்பதுவே**
**உன்னை அறிதற்கு உபாயம் பராபரமே"**
(மேலது, 96)

**"என்னைப் புரப்பது அருளின் கடன் ஆம் என் கடன்**
**நின்னில் பணி அறவே நிற்கை பராபரமே"**
(மேலது, 369)

முதலான பாடல்கள் பல தாயுமானவரின் இறையின்பத்தை நுகர வேண்டும் என்ற தாகத்தையும், தவிப்பையும் உணர்த்துகின்றன.

இறைவனை எப்படி வழிபடவேண்டும் என்பதை கல்லாதவர்கட்கும் புரியும் வண்ணம் எளிமையாகத் தாயுமானவர் எடுத்துரைக்கிறார். "உடல் வாட, எலும்புகள் நெகிழ்ந்து உருக, கண்ணீர் பெருக்கெடுத்து ஒழுக, ஊரு காந்தத்தால் இழுக்கப்பட்டு

நெருங்கு போல, உன்னிடம் நெருங்க வேண்டும். ஆன்மிக உறவு கொண்டு உன்னை நினைத்து நினைத்து மனம் படபட எனத் துடிக்க வேண்டும். உள்ளம் நடுக்கம் அடைய ஆடிப்பாடித் துதித்து வணங்க வேண்டும். புன்னகையுடன் இரு கைகளையும் கூப்பி உன்னை வாழ்த்த வேண்டும். இறைவனே இந்தக் கல்நெஞ்சனுக்கு எளிமையாய் இருப்பாயா?" என வேண்டுகின்றார். (6. கருணாகரக் கடவுள், செ.9)

தாயுமானவர், "சிவபோகம் என்னும் சிவானுபவப் பேரின்ப வெள்ளம் எங்கும் நிறைந்துள்ளது. நம்முடைய தேகம் அழியும் முன் அந்த இன்ப வெள்ளத்தை உண்ணுதற்குச் சேரவாகும் செகத்தீரே" என உலகினரை அழைக்கின்றார்.

தாயுமானவரின் வழிநின்று பாம்பன் சுவாமிகளும் உலக மக்களிடையே காணப்படும் குற்றங்களைத் தன் மேல் ஏற்றி, இறைவன் அத்தீமைகளை ஒழித்து, உனது பெரிய திருவுளம் மகிழ்ந்து ஆனந்த வாழ்வினை அறிந்து, எளியேனே அடிமை கொண்டருள்வாயாக என்கின்றார் (27 உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம், செ. 31-50)

சுருங்கக் கூறின் தாயுமானவரும், பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளும் மக்களிடையே காணப்படும் குற்றங்களைத் தம் மேல் ஏற்றிக் கூறி, இறையருளால் அக்குற்றங்களை நீக்கி உய்ய வேண்டும் என்பதை உணர்த்தி அவர்களை நன்னெறிப் படுத்துகின்றார்கள்.

திருச்சிற்றம்பலம்

❊ ❊ ❊ ❊ ❊